Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

சொலெக்ஸ் பல் மூக்குக் கண்ணாடியகம்

உங்கள் கண்களை இலவசமாக பரிசோதித்து கண்ணாடிகளை பெற்றுக்கொள்ளவும்

பல் சம்பந்தமான ஆலோசனைகளைப் பெற்று சங்குப் பற்களை கட்டிக் கொள்ளவும்



சொலெக்ஸ் மூக்கு கண்ணாடியகம்
516 ஆஸ்பத்திரி வீதி
O.P.D முன்பாக
யாழ்ப்பாணம்

Tel.Phone: 077-855328

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 ஆவணி 15 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ரஜப் 14 (31.08.2004) செவ்வாய்க்கிழமை இதழ்:333

# தமிழர் தாயகப் பகுதிகளில்

# ஆயுத குழுக்களின் செயற்பாடுகளை நிறுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்!

## அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்

(கிளிநொச்சி)

**தமிழர் தாயகப் பகுதிகளில் மாற்று ஆயுதக் குழுக்களை தொடர்ந்தும் செயற்பட அரசாங்கம் அனுமதியளித்தமையே இன்று பரவலாக இடம்பெறும் கொலைகளுக்குக் காரணமாக அமைந்துள்ளதென தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.**



நேற்று கிளிநொச்சியில் இடம்பெற்ற தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுடனான சந்திப்பின் பின்னர் ஊடகவியலாளர்களுக்கு கருத்துத் தெரிவித்தபோதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது -

இன்றைய சந்திப்பின்போது தற்போதைய அரசியல் சூழல் தொடர்பாகவும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், தமிழர் தரப்பும் முன்னெடுக்க வேண்டிய விடயங்கள் தொடர்பாகவும் விரிவாக ஆராயப்பட்டது. இதன்போது பல ஆக்கபூர்வமான முடிவுகள் எட்டப்பட்டன. இந்த முடிவு களின் அடிப்படையில் அனைத்து தமிழ்த் தேசிய நாடாளுமன்ற உறுப்பினர்களும் தீவிரமாகச் செயற்படுவதென உறுதியெடுத்துள்ளனர்.

தமிழ்த் தேசியத்துக்கு எதிராகவும், தமிழர் தரப்பால் முன்வைக்கப்பட்ட இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை தொடர்பாகவும் தவறான விமர்சனங்களும், பரப்புரைகளும் செய்யப்பட்டு வருகின்றன. அதற்கான சரியான விளக்கங்களை சகல மட்டங்களிலும் முன்னெடுப்பதற்கான நடவடிக்கைகளை அனைவரும் எடுப்பதென்றும் முடிவெடுக்கப்பட்டது.

இந்த நடவடிக்கைகளில் தமிழீழ விடுதலைப் புலிகளும், தமிழ்த் தேசிய நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் இணைந்து (12 ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டமைப்பு எம்.பிக்ளுடன் நேற்று தமிழ்ச்செல்வன் முக்கிய சந்திப்பு!



(கிளிநொச்சி)

தமிழ்த்தேசிய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனுக்கும் இடையில் நேற்று கிளிநொச்சியில் சந்திப்பொன்று நடைபெற்றது.

கிளிநொச்சியில் அமைந்துள்ள விடுதலைப் புலிகளின் திட்டமிடல் செயலகத்தில் நேற்றுக்காலை 10 மணிமுதல் பிற்பகல் 1.30 மணி வரை சுமார் நான்கு மணிநேரம் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில் விடுதலைப் புலிகள் தரப்பில் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், சமாதான செயலகப் பணிப்பாளர் (12 ஆம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்புக் குழுத் தலைவர் மட்டக்களப்புக்கு இன்று விஜயம்!

அண்மைக்காலமாக கிழக்கில் இடம்பெற்றுவரும் சம்பவங்கள் குறித்து நேரடியாக அறிந்துகொள்வதற்காக போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுத்தலைவர் ட்ரொன் புறூவ் ஹொவ்டே இன்று மட்டக்களப்புக்கு செல்லவுள்ளார்.

இன்று காலை மட்டக்களப்புக்கு செல்லும் இவர் அங்கு மாவட்ட கண்காணிப்புக் குழு அலுவலகத்தில் மாவட்ட கண்காணிப்பாளர்களுடன் சந்திப்பொன்றை நடாத்தவுள்ளார். இதன் பின்னர் இவர் அரச மற்றும் அரசசார்பற்ற அதிகாரிளையும் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.

இதன்பின் இவர் மட்டக்களப்பு மாவட்ட படை உயர் அதிகாரிகள் மற்றும் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளையும் சந்தித்து கலந்துரையாடலாமெனத் தெரிவிக்கப்பட்டபோதிலும், இதனை ஊர்ஜிதப்படுத்த முடியவில்லை.

இதேவேளை அம்பாறை மாவட்டத்தில் விடுதலைப்புலிகளின் (12 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் சமர்ப்பித்துள்ள திட்டவரைபால் நாட்டுக்கு எந்த அச்சுறுத்தலும் இல்லை!

### அமைச்சர் டி.எம்.ஜெயரட்ண கூறுகிறார்

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு மாகாணத்துக்கென விடுதலைப் புலிகளால் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை நாட்டுக்கு எவ்வித அச்சுறுத்தலையும் ஏற்படுத்தவில்லையென பொதுஜன ஐக்கிய முன்னணியின் செயலாளரும், தபால் தொலைத்தொடர்புகள் அமைச்சருமான டி.எம்.ஜெயரட்ன தெரிவித்தார்.

கொழும்புக்கு தெற்கேயுள்ள புளத்சிங்கள நகரத்தில் இடம்பெற்ற கூட்டமொன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது -

விடுதலைப் புலிகள் சமர்ப்பித்துள்ள திட்டவரைபு குறித்து நாம் எவ்வித அச்சமும் அடையத் தேவையில்லை. அத்துடன் தடைப்பட்டுப் போயுள்ள சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பதற்கு விடுதலைப் புலிகளின் இந்தத் திட்டவரைபை அடிப்படையாக வைத்து கலந்துரையாடலை நடத்தலாம்.

விடுதலைப் புலிகள் சமர்ப்பித்துள்ள திட்டவரைபானது, தற்போது நாட்டில் நடைமுறையிலுள்ள உள்ளூராட்சி அதிகாரசபை போன்ற மாதிரியையே கொண்டது. எனவே, இதனால் நாட்டுக்கு எவ்வித அச் (12 ஆம் பக்கம் பார்க்க)

## கனடாவில் வீதி விபத்து; இரண்டு ஈழத்தமிழர் பலி!

கனடாவின் ரொறன்ரோ நகரில் கடந்த சனிக்கிழமை பின்னிரவு இடம்பெற்ற வாகன விபத்தொன்றில் இரண்டு ஈழத் தமிழ் இளைஞர்கள் உயிரிழந்தனர்.

கடந்த சனிக்கிழமை இரவு ரொறன்ரோவில் தமிழர்கள் வாழும் ஸ்காபுரோப் பகுதியில் இந்த வீதி விபத்து இடம்பெற்றது.

சாரதியான நகுலேஸ்வரன் கந்தசாமி (வயது - 24) மற்றும் பயணியான பொன்னுத்துரை நேசகுமார் (வயது - 25) ஆகியோர் ஸ்தலத்திலேயே உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

மழை பெய்துகொண்டிருந்த போது இவர்கள் பயணம் செய்த வாகனம், வீதியை விட்டு விலகி மற்றுமோர் வாகனத்துடன் மோதியுள்ளது. இதன் காரணமாக இந்த அனர்த்தம் நிகழ்ந்துள்ளதாக ஆரம்ப பொலிஸ் விசாரணைகள் மூலம் அறியவந்துள்ளது.

விபத்தில் பலியான இரண்டு தமிழ் இளைஞர்களில் இறுதிக் கிரியைகளுக்கான ஏற்பாடுகள் உறவினர்களினால் மேற்கொள்ளப்படு (12 ஆம் பக்கம் பார்க்க)

## பாலா - சொல்ஹெய்ம் லண்டனில் இன்று சந்திப்பு!

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும், தத்துவாசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தை நோர்வேயின் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் இன்று லண்டனில் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார்.

அரசுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்டு வரும் முறுகல் நிலையைத் தணிக்கும் நோக்குடனேயே இந்தச் சந் (12 ஆம் பக்கம் பார்க்க)

## இரண்டாவது தொகுதி பட்டதாரிகளின் பெயர்ப்பட்டியல் நாளை வெளியாகும்!

(கொழும்பு)

வேலையற்ற பட்டதாரிகளுக்கு வேலைவழங்கும் திட்டப்பிரகாரம் இரண்டாவது தொகுதி பட்டதாரிகளின பெயர்ப்பட்டியல் நாளை வெளியிடப்படும் என நிதியமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

இரண்டாவது தொகுதி பட்டதாரிகளுக்கான பயிற்சி அடுத்த மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் ஆரம்பிக்கப்படும்.

முதலாவது தொகுதி பட்டதாரிகளுக்கு பயிற்சி வழங்குவதற்கான கடிதங்கள் திறைசேரியின் முகாமைத்துவத் திணைக்களத்தால் ஏற்கனவே அனுப்பப்பட்டுள்ளன. அவர்களுக்கான மூன்று மாதப் பயிற்சி எதிர்வரும் 2 ஆம் திகதி ஆரம்பமாகும் எனத் தெரிவித்தார். (12 ஆம் பக்கம் பார்க்க)




இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

தொடர்புகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2549999, 011-2372952-3, 011-2360290, 011-2360291

email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.

EXPOAIR
Your friend in the skies...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைதடி—நாவற்குழி பிரதான பாலங்கள் விரைவில் புனரமைக்கப்படவுள்ளது!

## யாழ்.செயலக வட்டாரங்கள் தகவல்

(யாழ்ப்பாணம்)

கைதடி, நாவற்குழி பாலங்களைத்திருத்துவதற்கான நடவடிக்கைகள் உடன் ஆரம்பிக்கப்படவுள்ளதாக யாழ்.செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த இரு பாலங்களையும் திருத்துவது தொடர்பான கூட்டமொன்று நேற்று யாழ்.செயலகத்தில் நடைபெற்றது.

இந்தக்கூட்டத்தில் - யாழ்.அரச அதிபர், யாழ்.மாவட்டச் செயலகத்தின் திட்டமிடற்பணிப்பாளர் சுந்தரம்பிள்ளை, மினிபஸ் உரிமையாளர் சங்கப் பிரதிநிதிகள், வட.பிராந்தியப் போக்குவரத்துச் சபையின் அதிகாரிகள், வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் அதிகாரிகள் மற்றும் இராணுவத்தரப்பில் - பிரிகேடியர் ரணவீர, 524 ஆவது படையணித்தலைமையதிகாரி பிரிகேடியர் ரட்ணநாயக்க, பொதுமக்கள் ஒருங்கிணைப்பு அலுவலர் பிரிகேடியர் வீரதுங்க முதலானோரும் கலந்துகொண்டனர்.

கைதடி, நாவற்குழிப்பகுதிகளில் - ஏ-9 வீதியில் உள்ள பிரதானமான பாலங்கள் இரண்டையும் சிறப்பாக நிர்மாணிப்பதற்குப் பல்வேறு முயற்சிகள் எடுக்கப்பட்டு வந்தபோதிலும், தற்போது இங்கிலாந்தின் தனியார் நிறுவனமொன்றின் உதவியுடன் இந்தப் பாலங்கள் இரண்டும் புனரமைக்கப்படவுள்ளன.

இந்தப் பாலங்களின் புனரமைப்புக்கான ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளும் கூட்டமே நேற்று யாழ்.செயலகத்தில் நடைபெற்றது.

இதில், பாலங்கள் புனரமைக்கப்படும்போது - பாலங்களுக்கு அருகாமையில் போக்குவரத்துப்பாதை அமைப்பதெனவும், மழை காலம் ஆரம்பமாகும் முன்னர், பாலம் புனரமைக்கும் பணிகளை முடிப்பதெனவும் தீர்மானம் எடுக்கப்பட்டதாகவும் தெரியவருகிறது.

இந்தப் பணிகளுக்காக இங்கிலாந்தின் 'மாபேயன் ஜோண்சன்' நிறுவனம் இரண்டு இலட்சம் அமெரிக்க டொலர்கள் வரை ஒதுக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. (ப)

# மனித உரிமைகள் ஆணைக்குழுவால் விசேட கருத்தரங்கு நடத்த ஏற்பாடு!

(யாழ்ப்பாணம்)

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஏற்பாட்டில், நாளை - உள்நாட்டில் இடம்பெயர்ந்தோருக்கும், மீள்குடியமர்ந்தோருக்குமான தேசியப் பாதுகாப்புக்கும் நீண்டகாலத் தீர்வுக்குமான செயற்திட்டம் குறித்த கருத்தரங்கு நடத்தப்படவுள்ளது.

வை.எம்.சி.ஏ மண்டபத்தில் நடத்தப்படவுள்ள இந்தக்கருத்தரங்கானது நாளை காலை 9 மணி முதல் பிற்பகல் 4 மணிவரை நடைபெறுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் - யாழ். மாவட்ட அரச அதிபர், மற்றும் செயலகத்தைச் சேர்ந்த அதிகாரிகள், யு.என்.எச்.சி.ஆர், யுனிசெப், முதலான அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளதுடன், கருத்துரைகளையும் வழங்கவுள்ளார்கள்.

இங்கு சிறுவர், இடம் பெயர்ந்தோர், பெண்கள் முதலானோரின் உரிமைகள் பற்றி விளக்கமளிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ப)

## பட்டதாரிகள் சங்க பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட வேலையற்றபட்டதாரிகள் சங்கத்தின் பொதுக் கூட்டமொன்று இன்று காலை 10.30 மணிக்கு ஆரியகுளம் சந்தியில் உள்ள புதிய உயர் கலைக்கல்வி நிறுவனத்தில் இடம்பெறவுள்ளது.

இந்தக்கூட்டத்துக்கு, சகல யாழ். மாவட்ட வேலையற்றபட்டதாரிகள் மற்றும் முகாமைத்துவப் பயிலுனர்களையும் வருகைதருமாறு சங்கத்தின் செயலாளர் கேட்டுள்ளார். (205)

## சமகால அரசியற் கருத்தரங்கு

(மானிப்பாய்)

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையின் ஏற்பாட்டில், நடத்தப்பட்டுவரும் சமகால அரசியற் கருத்தரங்குத் தொடர் - நாளை பிற்பகல் 3.30 மணிக்கு சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கில் - 'தொடரும் திட்டமிட்ட தமிழ் இனத்துவ அழிப்புக்கள்' என்னும் தலைப்பில் யாழ். பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்படிப்புகள் கல்லூரியின் விரிவுரையாளர் அ.குமாரவேல் உரையாற்றுவார். (100)

# சிறுமி மீது பலாத்காரம் குடும்பஸ்தர் கைது!

சிறுமியைப் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியதாகத் தெரிவித்து, இரண்டு பிள்ளைகளின் தந்தை ஒருவர், சுன்னாகம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதுகுறித்து - தெரியவருவதாவது, ஏழாலை தெற்கு மயிலங்காட்டைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தை ஒருவர் 15 வயது சிறுமியைப் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக, சிறுமியின் பெற்றோர் சுன்னாகம் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளனர். இதனையடுத்தே, பொலிஸார் அவரைக் கைது செய்துள்ளனர்.

பாலியல் வல்லுறவுக்கு உட்பட்டதாகத் தெரிவிக்கப்படும் இந்தச் சிறுமி தற்போது நான்குமாத கர்ப்பிணியாக இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

விசாரணைகளை மல்லாகம் மாவட்ட நீதிபதி நடத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# மண்டைதீவு - அல்லைப்பிட்டி வீதியை பாவனைக்கு திறந்துவிடக்கோரிக்கை!

இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிலுள்ள மண்டைதீவு, அல்லைப்பிட்டி வீதியை மக்கள் பாவனைக்கு திறந்துவிடுமாறு, அந்தப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மண்டைதீவையும், தீவகத்தின் ஏனைய பிரதேசங்களையும் இணைக்கும் மண்டைதீவு - அல்லைப்பிட்டி இணைப்பு வீதி கடந்த 13 வருடங்களுக்கு மேலாக கடற்படையினரால் தடைசெய்யப்பட்டுள்ளது.

இந்த வீதியால், தீவகத்தின் ஏனைய பிரதேசங்களுக்குச் செல்வதில் இந்தப் பகுதி மக்கள் பல்வேறு கஷ்டங்களை எதிர்நோக்கி வருகின்றனர். எனவே பொதுமக்களின் நன்மை கருதி இந்த வீதியை திறக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த வீதி புனரமைக்கப்பட்ட பின்னர் - இதனூடாக பஸ் சேவைகள் நடத்துவதன் மூலம் - மண்டைதீவு, அல்லைப்பிட்டிப் பகுதிகளின் போக்குவரத்து பிரச்சினையும் தீர்க்க முடியும் என அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர். (99)

# வீடமைப்பு அதிகாரி 2 ஆம் திகதி வருகிறார்!

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் வீடமைப்புத் திட்டங்கள் குறித்து ஆராயும் பொருட்டு வடக்கு - கிழக்கு வீடமைப்பு மீள் அபிவிருத்தித் திட்ட அதிகாரியான டாக்டர் நரயன் எடடான் அடுத்த மாதம் 2ஆம் திகதி யாழ்ப்பணத்துக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

இவரது வருகையின்போது- யாழ்.மாவட்டத்தில் உள்ள வீடற்ற மக்களின் முழுவிபரங்கள் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக, யாழ்.அரச செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. யாழ் மாவட்டத்தில் உலக வங்கியின் உதவியுடன், முதற்கட்டமாக மேற்கொள்ளப்பட்டுவரும் வீடமைப்பு பணிகளைப் பார்வையிடவுள்ளதுடன் மேலும், மேற்கொள்ளப்படவுள்ள வீடமைப்பு பற்றியும் ஆராயவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# வலயமட்ட ஆங்கில தின போட்டி முடிவுகள் விபரம்!

வலயமட்ட ஆங்கிலத்தினப் போட்டி முடிவுகள் அண்மையில் யாழ்.வலயக் கல்விப்பணி மனையால் வெளியிடப்பட்டுள்ளது.

முதல் மூன்று இடங்களையும் பெற்ற மாணவர்களின் பெயர் விபரம் வருமாறு :

### தரம் - 03

முதலாம் இடம் - க.ஹரிகரன்- (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி).

இரண்டாம் இடம் - (கு.சலோமி துஷ்யந்தினி - (சென்.ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்).

மூன்றாம் இடம் - (செ.சுப்புலட்சுமி - (யாழ்.இந்து ஆரம்பப்பாடசாலை).

### தரம் - 04

முதலாம் இடம் - கு.சறோனி வான்மதி - (சென்.ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்).

இரண்டாம் இடம் - பெ.பிரய்சிஹன்னா - (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி).

மூன்றாம் இடம் - ச.சாரங்கா (யாழ்.இந்து ஆரம்பப் பெண்கள் பாடசாலை).

### தரம் - 05

முதலாம் இடம் - ம.ஜோசப்காவ் - (சென்.பற்றிக்ஸ் கல்லூரி).

இரண்டாம் இடம் - சா.வசந்தகுமார் - (யாழ்.இந்து ஆரம்பப் பெண்கள் பாடசாலை).

மூன்றாம் இடம் - ஜெ.ஜீவனேசன் - (சென்.பற்றிக்ஸ் கல்லூரி).

### தரம் - 06

முதலாம் இடம் - வெ.பெனடிக்ற்- (சென்.ஜோன்ஸ் கல்லூரி).

இரண்டாம் இடம் - ஹ.ஜெயராம் - (சென்.ஜோன்ஸ் கல்லூரி).

மூன்றாம் இடம் - ஜெ.திவ்வியா- (கொக்குவில் இந்துக்கல்லூரி).

### தரம் - 07

முதலாம் இடம் - ச.ஜோ.சஞ்சீவராஜ் - (சென்.பற்றிக்ஸ் கல்லூரி).

இரண்டாம் இடம் - பே.அனோசிறிபானி - (யாழ்.திருக்குடும் கன்னியர்மடம்).

மூன்றாம் இடம் - செ.செல்வலட்சுமி - (யாழ்.இந்து மகளிர் கல்லூரி).

### தரம் - 08

முதலாம் இடம் - சி.ஜானகா - (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி).

இரண்டாம் இடம் - அ.ட.சாம்சன் லூர்திஸ் - (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி).

மூன்றாம் இடம் - தி.செழியன்- (யாழ்.இந்துக் கல்லூரி).

### தரம் - 09

முதலாம் இடம் - அ.யூடி இமாக்குலின் நர்மதா - (யாழ்.திருக்குடும்ப கன்னியர்மடம்).

இரண்டாம் இடம் - பா.செறின் பொஸ்ரேனா - (யாழ்.திருக்குடும்ப கன்னியர்மடம்)

மூன்றாம் இடம் - ர.பவதாரணி- (யாழ்.இந்து மகளிர் கல்லூரி).

*(மிகுதி நாளை தொடரும்....)*

## நமது ஈழநாடு

### இரண்டாவது ஆண்டு நிறைவையொட்டி நடாத்தப்படும் கலை, இலக்கிய - போட்டிகள்

நமது ஈழநாடு பத்திரிகையின் இரண்டாவது ஆண்டு நிறைவையொட்டி கலை - இலக்கியப் போட்டிகளை நடத்துவதற்கு தீர்மானித்திருப்பதை மகிழ்வுடன் அறியத்தருகிறோம்.

### போட்டிக்கான விதிகள்

### சிறுகதை மற்றும் கவிதைப் போட்டி

- படைப்புக்கள் யாவும் படைப்பாளியின் சுய ஆக்கமாக இருத்தல் வேண்டும் - மொழிபெயர்ப்புக்கள் நிராகரிக்கப்படும்.
- சிறுகதைகள் யாவும் தெளிவான எழுத்திலோ, தட்டச்சு செய்யப்பட்டோ இருத்தல் வேண்டும். கையெழுத்தில் 7 பக்கங்களுக்குள்ளும் - தட்டச்சில் 5 பக்கங்களுக்குள்ளும் இருப்பது அவசியம்.
- கவிதைகள் மரபுக்கவிதையாகவோ அல்லது புதுக்கவிதையாகவோ இருக்கலாம். எதுவானாலும் 20 முதல் 30 வரிகளுக்குட்பட்டதாக இருத்தல் வேண்டும்.
- படைப்புக்கள் யாவும் சமகால சமூகவியல் - வாழ்வியல் பிரச்சினைகளை மையமாகக் கொண்டவையாக இருத்தல் வேண்டும்.
- ஆக்கங்களை அனுப்ப வேண்டிய இறுதித் திகதி 15-09-2004 ஆகும்.

### புகைப்படப் போட்டி

- புகைப்படத் துறையில் ஆர்வமுள்ளவர்கள் தொழில் சார் கலைஞர்கள் எவரும் இதில் பங்குபற்றலாம் - வயது வேறுபாடில்லை.
- போட்டிக்கு அனுப்பப்படும் படங்கள் கறுப்பு வெள்ளைப் படங்களாகவும் இருக்கலாம். வண்ணப்படங்களாகவும் இருக்கலாம். அளவு 6 CM X 4 CM ஆக இருத்தல் அவசியம்.
- புகைப்படங்கள் - எமது மண்ணின் இயற்கையழகு எமது மண்ணின் பாரம்பரியம், சமகால வரவாற்றுப் பதிவுகள் ஆகியவற்றைப் பதிவு செய்ததாக இருக்கவேண்டும்.
- ஒருவர் மூன்று படங்கள் வரை அனுப்ப முடியும். ஆனால் ஒரு படத்துக்கு மட்டுமே பரிசு வழங்கப்படும்.
- புகைப்படங்களுடன் பெயர் விலாசம் போன்றவை தனியாக இணைக்கப்படல் வேண்டும்.
- அனுப்ப வேண்டிய இறுதித் திகதி 15-09-2004 ஆகும்.

### கையெழுத்து சஞ்சிகை உருவாக்கல் போட்டி

*நிபந்தனைகள்*

இந்தப் போட்டி இரண்டு பிரிவுகளாக நடத்தப்படும்.

1. பாடசாலை மாணவர்களுக்கானது.
2. தனிநபர் - தனியார் அமைப்புக்களுக்கானது

பாடசாலை மாணவர்களுக்கான போட்டி மத்திய பிரிவு - மேற்பிரிவு என இரு பகுதிகளாக நடத்தப்படும்.

மத்திய பிரிவு- க.பொ.த (சாதாரண) தரத்திற்கு உட்பட்டவர்களுக்குரியது.

மேற்பிரிவு - அதற்கு மேற்பட்டவர்களுக்குரியது.

- போட்டிக்கு சமர்ப்பிக்கப்படும் சஞ்சிகைகள் மாணவர்களின் சுய படைப்பாற்றல் மற்றும் ஆக்கத்திறனை வெளிப்படுத்துபவையாக இருக்க வேண்டும்.
- சஞ்சிகைகள் 40 முதல் 50 பக்கங்கள் வரையுள்ளதாகவும் ஒரு அழகான கலைத்துவமான சஞ்சிகைக்குரிய தரமான வடிவமைப்புக் கொண்டதாகவும் தெளிவான கையெழுத்துக்களில் எழுதப்பட்டவையாகவும் இருத்தல் வேண்டும்.
- தனிநபர்கள் - தனியார் அமைப்புகள் ( இலக்கிய வட்டங்கள் - சனசமூகநிலையங்கள்) அனுப்பிவைக்கும் சஞ்சிகைகளும் மேற்குறிப்பிட்ட விதிகளை அனுசரிக்க வேண்டும்.
- மாணவர்கள் தங்களின் சஞ்சிகை தயாரிப்பில் தமது ஆசிரியர்களின் ஆலோசனைகளை நாடமுடியும்.
- மிகத் தரமானதெனத் தேர்தெடுக்கப்படும் - சஞ்சிகைகளுக்குரிய சகல அம்சங்களையும் உள்ளடக்கிய ஆக்கங்களுக்கு பெறுமதி வாய்ந்த பரிசுகள் வழங்கப்படும்.
- சஞ்சிகைகள் கிடைக்க வேண்டிய கடைசித் திகதி 15.09.2004
- பதிவுத்தாபாலில் அனுப்புதல் பாதுகாப்பானது - நேரிலும் கையளிக்கலாம்.
- பாடசாலை மாணவர்களின் சஞ்சிகைகள் பாடசாலை வகுப்பாசிரியர் அல்லது அதிபரால் உறுதிப்படுத்தப்படவேண்டும்.

**குறிப்பு:-** இப்போட்டிகளில் நமது ஈழநாடு நிறுவன ஊழியர்கள் எவரும் பங்குபற்ற முடியாது.

போட்டிக்கான ஆக்கங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:- நமது ஈழநாடு - 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்சி உறுப்பினர்களை கைதுசெய்வதற்கு எதிராக ஐ.நா. சபையில் முறையிடுவதற்குத் தீர்மானம்!

## ஐக்கிய தேசியக் கட்சி தெரிவிப்பு

தமது கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கைதுசெய்யப்படுவது தொடர்பாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்துக்கு எதிராக ஐக்கிய நாடுகள் சபையிடம் முறைபபாடு செய்யவுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

இதன்படி விரைவில் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிநிதிகள் குழுவொன்று ஜெனீவாவில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழு செயலகத்துக்குச் செல்லவுள்ளதாக தெரியவருகிறது.

அடிப்படை மனித உரிமையை மீறும் வகையில் தமது உறுப்பினர்களைக் கைதுசெய்யும் நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டு வருவதாகவும், ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்த்தன குற்றம்சாட்டியுள்ளார்.

அடுத்த மாதம் நடைபெறவுள்ள உள்ளக நாடாளுமன்றச் சங்க கூட்டத்தின்போது, அரசாங்கத்தின் இந்த முறைகேடான நடவடிக்கை தொடர்பாக ஆராயப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் அமைச்சர்களான ரவி கருணாநாயக்க மற்றும் அப்துல் காதர் ஆகியோரைக் கைதுசெய்தமை மூலம் இலங்கையின் சட்ட திட்டங்களை மதிப்பதற்கு அரசாங்கம் தவறியுள்ளதாகவும் அவர் குற்றம்சாட்டியுள்ளார்.

அரசியல் பழிவாங்கலுக்காக அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்து வரும் அரசாங்கத்தின் நடவடிக்கைகள் தொடர்பான முறைப்பாட்டை ஐக்கிய தேசியக்கட்சி தயாரித்து வருவதாகவும் தெரிவித்த ஜயலத்- மனிதவுரிமை ஆணைக்குழு மற்றும் ஐரோப்பிய யூனியன் ஆகியவற்றிடம் இந்த முறைப்பாடுகள் கையளிக்கப்படவுள்ளதாகவும் தெரிவித்தார்.



அண்மையில் முகமாலை முன்னரங்கப் பகுதிக்கு மின் விநியோகத்துக்கான ஆரம்ப நிகழ்வை, யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைப்பதைப் படத்தில் காணலாம்.

# வட- கிழக்கை பிரிக்க கோரி உயர் நீதிமன்றில் வழக்கு

## தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் தீர்மானம்

(கொழும்பு)

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் மூலம், ஒன்றிணைக்கப்பட்ட வடக்கு - கிழக்குப் பிரதேசங்களை மீண்டும் பிரிக்கும்படி கோரி, உயர் நீதிமன்றத்தில் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்கு தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் தீர்மானித்துள்ளது.

இந்த மனு தற்போது தயாரித்து முடிக்கப்பட்டுள்ளதாகவும், அது அடுத்த வாரம் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் என்றும் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் தெரிவித்தது.

இந்திய இலங்கை ஒப்பந்தத்தின்படி வடக்கு - கிழக்கு பிரதேசங்கள் இரண்டையும் இணைத்தது. ஒரு வருடத்தின் பின் பொதுமக்களின் கருத்துக் கணிப்புக்கான சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படும் என்ற நிபந்தனையுடனேயாகும்.

இந்த இரண்டு மாகாணங்களையும் வேறு வேறு மாகாணங்களாக அறிவிக்கக் கோரி இந்த முறைப்பாடு உயர் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாகவும் அந்த அமைப்பு தெரிவித்தது.

இதற்கிடையில் இடைக்கால நிர்வாக சபைக்கு எதிராகவும் வடக்கு-கிழக்கைப் பிரிக்குமாறு கோரி, கல்முனையில் மாநாடு ஒன்று நடக்குமென்று சிங்களத்திலும், தமிழிலுமான சுவரொட்டிகள் - கொழும்பிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் பரவலாக ஒட்டப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# உரிய வசதிகளை வழங்கினால் விரைவாக அடையாள அட்டைகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்

(கொழும்பு)

வாக்காளர் இடாப்பு பதிவு செய்யப்பட்ட போது தேசிய அடையாள அட்டை இலக்கங்கள் குறிப்பிடப்படாமை, தேசிய அடையாள அட்டைகள் இல்லை என்பதற்கு காரணம் அல்ல என்று, ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளர் பீ.வீ அபயக்கோன் தெரிவித்தார்.

இலங்கை வாக்காளர்களில் 30 சதவீதமானோருக்கு ஆள் அடையாள அட்டைகள் கிடையாதென தேர்தல் ஆணையாளர் தெரிவித்த கருத்துக்கு பதிலளிக்கும் வகையில், ஆட்பதிவு திணைக்கள ஆணையாளர் இதனைத் தெரிவித்தார்.

இலங்கையில் 1 கோடி 28 லட்சத்து 99 ஆயிரத்து ,32 பேர் வாக்காளர்களாக பதிவு செய்துள்ளார்கள். இவர்களில் 90 லட்சத்து 77 ஆயிரத்து 430 பேரே ஆள் அடையாள அட்டைகள் தொடர்பான விபரங்களை தெரிவித்துள்ளனர். இந்த அறிக்கையின்படி 30 சதவீதமானோருக்கு தேசிய அடையாள அட்டைகள் கிடையாது.

வாக்களிப்பதற்கு ஆள் அடையாள அட்டைகள் கட்டாயப்படுத்தப்படாது இருப்பதால், பெருந்தொகையான வாக்காளர்கள் வாக்காளர் பதிவின் போது அது சம்பந்தமாகக் கவனம் செலுத்தவில்லை என, பிரதேச கிராம உத்தியோகத்தர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

அண்மையில் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிநிதிகள், தேர்தல் ஆணையாளர் மற்றும் ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளருக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் போது இந்த விடயம் சம்பந்தமாக நீண்ட நேரம் ஆராயப்பட்டது.

அத்துடன், தேவையான வசதிகளை வழங்கினால் ஏழு அல்லது எட்டு மாதங்களுக்குள் ஆள் அடையாள அட்டைகள் வழங்க முடியும் என்று ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளர் பீ.வீ.அபயக்கோன் தெரிவித்தார்.

# ஜெனீவா கண்ணிவெடி ஒழிப்பு மாநாட்டில் புலிகள் பங்கேற்பு!

(ஜெனீவா)

சுவிற்சர்லாந்தின் தலைநகரான ஜெனீவாவில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற கண்ணிவெடி ஒழிப்புத் தொடர்பான மாநாட்டில் தமிழீழ விடுதலைப் புலிகளின் இரண்டு சிரேஷ்ட பெண் போராளிகள் கலந்து கொண்டுள்ளனர்.

கண்ணிவெடி ஒழிப்புத் தொடர்பில், அரச சார்பற்ற பெண் செயற்பாட்டாளர்கள் எவ்வாறு பங்களிப்புச் செய்யலாம் என்பது தொடர்பாக சுவிற்சர்லாந்தின் தன்னார்வத் தொண்டு நிறுவனம் ஒன்றினாலேயே இந்த மாநாடு ஒழுங்கு செய்யப்பட்டிருந்ததாகத் தெரியவருகின்றது.

அரச சார்பற்ற பெண் செயற்பாட்டாளர்கள் பலர் கலந்துகொண்ட இந்த மாநாட்டின் இறுதியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்து வெளியிட்ட கண்ணிவெடி ஒழிப்புக்கான ஆதரவுக்குழுவின் பேச்சாளர் ஒருவர், இந்த மாநாட்டில் விடுதலைப் புலிகளின் இரண்டு பெண்போராளிகள் கலந்துகொண்டமை குறித்து மகிழ்ச்சி வெளியிட்டார்.

# சட்டவிரோத ஆயுதங்கள் கையளிப்பு நவம்பர் 30 ஆம் திகதிவரை நீடிப்பு

(கொழும்பு)

சட்டவிரோத ஆயுதங்களைக் கையளிப்பதற்கான பொது மன்னிப்புக்காலம் எதிர்வரும் நவம்பர் மாதம் 30 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

இந்தக் காலத்துக்குள் சட்டவிரோத ஆயுதங்களைக் கையளிக்காது வைத்திருப்போருக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு, மக்கள் பாதுகாப்பு அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதற்குரிய பொது மன்னிப்புக் காலம் மேலும் இரண்டு மாதங்கள் நீடிக்கப்பட்டுள்ளது. நாளை முதல் நவம்பர் மாதம் 30 ஆம் திகதிவரை பொது மன்னிப்புக் காலம் அமுலில் இருக்கும்.

நாடுமுழுவதும் சுமார் 35 ஆயிரம் சட்டவிரோத ஆயுதங்கள் பாவனையில் உள்ளன. இவற்றில் சுமார் ஆயிரத்து 350 ஆயுதங்கள் கையளிக்கப்பட்டுள்ளன.

ஏனைய ஆயுதங்கள் பாதாள உலகக் கோஷ்டியினரிடமும், வேறு நபர்களிடமும் இருப்பதாக மக்கள் பாதுகாப்பு அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

சட்டவிரோத ஆயுதங்களை வைத்திருப்பவர்கள் அவற்றை அரசாங்கத்திடம் உடனடியாகக் கையளிக்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களும், தம்மிடமுள்ள ஆயுதங்களை விரைவில் கையளிக்க வேண்டும் என்று, மக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் திலக் ரணவிராஜா கோரிக்கை விடுத்துள்ளார்.

## வீதி விளக்கு திருத்தப்படவில்லை

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை வீதியுடன் கல்வியங்காடு ஞானபாஸ்கரோதயா வீதியை இணைக்கும் சந்தியில் அமைந்துள்ள வீதி விளக்கு, பழுதடைந்த நிலையில் நீண்ட நாட்களாக கவனிப்பாரற்றுக் காணப்படுகின்றது.

இந்த வீதியானது பொது மக்கள், கனரக வாகனங்கள் மற்றும் இதர வாகனங்களின் பாவனை அதிகமுள்ள இடம் என்பது குறிப்பிடத்தக்கது.

## டொலர்களை அச்சிட்ட மாணவன் கைது

(கொழும்பு)

அமெரிக்க டொலர்களை அச்சிட்டு வந்த மாணவன் ஒருவன் நேற்று முன்தினம் கண்டியில் கைது செய்யப்பட்டார்.

இவரிடம் இருந்து நூற்றுக்கும் மேற்பட்ட டொலர் நோட்டுக்கள் கைப்பற்றப்பட்டதாக, கண்டி பொலிஸார் தெரிவித்தனர்.

இதன் பெறுமதி ஒன்றரை மில்லியன் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது.

இவர் கண்டி நகரில் அமைந்துள்ள இடம் ஒன்றில் வைத்து இந்த அமெரிக்க நோட்டுக்களை அச்சிட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவரின் வயது 16 ஆகும்.

குற்றம் ஒன்றுக்காகச் சிறையில் இருக்கும் தமது தந்தையைப் பிணையில் எடுக்கவே இவ்வாறான சட்டவிரோத டொலர் நோட்டுக்களை அச்சிட்டதாக, குறிப்பிட்ட மாணவன் பொலிஸாரிடம் தெரிவித்தார்

# விடுதலைப் புலிகள் - முஸ்லிம்கள் அம்பாறையில் சந்தித்துப் பேச்சு!

தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுக்கும், முஸ்லிம் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்றுமுன்தினம் அம்பாறையில் நடைபெற்றது.

அம்பாறை மாவட்டத்தின் திருக்கோவில் அரசியற்துறை அலுவலகத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில், தமிழீழ விடுதலைப் புலிகள் தரப்பில் - தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறைத் துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன், தூயவன், அரசறிவியல் கல்லூரி அதிபர் அரசண்ணா, அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் குயிலின்பன் ஆகியோரும், முஸ்லிம்கள் தரப்பில் - அம்பாறை மாவட்ட அனைத்துப் பள்ளிவாசல்களின் சம்மேளனத் தலைவர் ஐ.எம்.இப்ராகிம் தலைமையில் 7 பேர் கலந்துகொண்டனர்.

தமிழ் முஸ்லிம் மக்களின் ஒற்றுமையை வலுப்படுத்தும் பொருட்டே இந்தச் சந்திப்பு நடத்தப்பட்டதாகவும், பெரும்பான்மை சமூகம் இரு இனங்களையும் பிரிப்பதில் குறியாக இருப்பதாகவும், தமிழீழ விடுதலைப் புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சந்திப்பில் அம்பாறையில், விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள முஸ்லிம்களின் காணிகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டதாகவும் தெரியவருகிறது.

இந்தச் சந்திப்பில் பேசப்பட்ட விடயங்கள் தமக்கு மனநிறைவைத் தந்ததாக முஸ்லிம் தரப்பு தலைவர் இப்ராகிம் தெரிவித்தார். (07)

# முஸ்லிம் காங்கிரஸின் இடைக்கால நிர்வாக யோசனை பூர்த்தியாம்!

## ஹசன் அலி தெரிவிப்பு

இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பிலான சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் இடைக்கால நிர்வாகசபை யோசனை வரைபு பூர்த்தியடைந்துள்ளதாக, அதன் பொதுச் செயலாளர் ஹசன் அலி தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்ட இடைக்கால நிர்வாகசபை யோசனையில், முஸ்லிம்களுக்கு உரிய இடம் வழங்கப்படவில்லை எனத் தெரிவித்த முஸ்லிம் காங்கிரசின் பொதுச்செயலாளர் ஹசன் அலி, பேச்சுவார்த்தைகளில் இறுதித் தீர்வு குறித்து ஆராயப்படும் போது, அரசாங்கமும் தமிழீழ விடுதலைப் புலிகளும் - முஸ்லிம் காங்கிரஸின் இடைக்கால நிர்வாகசபை தொடர்பாகக் கவனம் செலுத்தியே ஆகவேண்டும்.

பேச்சுவார்த்தைகளில் முஸ்லிம்கள் குறித்துப் பேசுவதற்கு அரசாங்கத்தையோ விடுதலைப் புலிகளையோ நாம் அனுமதிக்கப் போவதில்லை. முஸ்லிம்களிடமிருந்து ஆணை பெற்றவர்கள் என்ற நிலையில் முஸ்லிம்கள் சார்பாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பேசுவதே பொருத்தமானது.

முஸ்லிம் காங்கிரஸின் இந்த இடைக்கால நிர்வாக சபை யோசனையானது - கென்யா மற்றும் தென்னாபிரிக்கா ஆகிய நாடுகளின் அரசியலமைப்பைத் தயாரிப்பதில் பெரும்பங்கு வகித்துவரும் கொங்கொங் பல்கலைக்கழகத்தின் பேராசிரியருடைய ஆலோசனையுடன் தயாரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் வேலைநிறுத்தப் போராட்டத்துக்கு முஸ்தீபு

தமது கொடுப்பனவு நிலுவை தொடர்பில் சிலிடா அமைப்பு வெளியிட்டுள்ள பரிந்துரைகளை ஆட்சேபித்து பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களின் நிலுவைக் கொடுப்பனவுகள் சம்பந்தமாகப் பலவருடங்களாகப் பிரச்சினை நிலவி வந்தது.

இதனையடுத்து அரசாங்க ஊழியர்களின் சம்பளப் பிரச்சினைகளைக் கையாளும் சிலிடா அமைப்பு பரிந்துரைகளைச் சமர்ப்பித்திருந்தது.

அந்த அமைப்பு ஆரம்பத்தில் சமர்ப்பித்திருந்த பரிந்துரைக்கும், தற்சமயம் இறுதிப்படுத்தப்பட்டுள்ள பரிந்துரைக்கும் இடையில் ஆட்குறைப்பு விடயத்தில் வேறுபாடுகள் இருப்பதாகப் பல்கலைக்கழக ஊழியர் சங்கம் கூறுகிறது.

எனவே, அதனை மாற்றியமைக்க வேண்டும் எனக் கோரும் அந்தச் சங்கம், தமது நிலுவைக் கொடுப்பனவுகள் இந்த மாத இறுதிக்குள் வழங்கப்படவேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இல்லையேல் எதிர்வரும் செப்டெம்பர் முதலாம் திகதிமுதல் தாம் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளதாக பல்கலைக்கழக ஊழியர் சங்கம் எச்சரித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கூடைப்பந்து வலையை அறுக்கும் ஆர்ஜென்ரீன நாட்டு வீரர்!



மேல் அமர்ந்து ஏதோ செய்யும் இவரைப் பார்த்ததும் - ஒலிம்பிக் போட்டி ஊழியர் என்றுதான் அனைவருக்கும் நினைவுக்கு வரும்.

ஆனால் உண்மை அதுவல்ல. கிரிக்கெட்டில் வெற்றி பெற்றதும் வீரர்கள் எப்படி விக்கெட்டுக்களை எடுத்துக் கொண்டு ஓடுகிறார்களோ, அதுபோல ஆர்ஜென்ரீனாவைச் சேர்ந்த வோல்டர் ஹென்மன் தனது நாட்டுக்கு தங்கப் பதக்கத்தைச் சேர்த்ததும், ஞாபகார்த்தமாக மைதானத்தில் இருந்த வலையையும் கொண்டு செல்வதற்குத்தான் இந்த முயற்சியை மேற்கொண்டார்.

# அமெரிக்கா 35 தங்கம் குவித்து முதலிடத்தை பெற்றுக்கொண்டது

உலகின் மிகப்பெரிய விளையாட்டுத் திருவிழாவான ஒலிம்பிக் போட்டி ஏதென்ஸ் நகரில் கடந்த 13 ஆம் திகதி கோலாகலமாகத் தொடங்கியது. நேற்றுமுன்தினம் இரவு வண்ணமயமான நிகழ்ச்சியுடன் நிறைவு விழா நடந்தது.

பதக்கப் பட்டியலில் அமெரிக்கா முதலிடத்தைப் பிடித்தது. அந்த அணி 35 தங்கம், 39 வெள்ளி, 29 வெண்கலம் என மொத்தம் 103 பதக்கம் பெற்றது.

2008 ஆம் ஆண்டுக்கான ஒலிம்பிக் போட்டியை நடத்தும் சீனா 32 தங்கம், 17 வெள்ளி, 14 வெண்கலம் என மொத்தம் 63 பதக்கம் பெற்று 2 ஆவது இடத்தைப் பிடித்தது.

போட்டியின் தொடக்கத்தில் பின்தங்கியிருந்த ரஷ்யா- பின்னர் படிப்படியாக முன்னேறியது. அந்த அணி பதக்கப் பட்டியலில் 3 ஆவது இடத்தைப் பிடித்தது. ரஷ்யா 27 தங்கம், 27 வெள்ளி, 38 வெண்கலம் ஆக மொத்தம் 92 பதக்கங்களைப் பெற்றது. அவுஸ்ரேலியா 4 ஆவது இடத்தையும், ஜப்பான் 5 ஆவது இடத்தையும் பிடித்தன.

202 நாடுகள் பங்கேற்ற இந்தப் போட்டியில் இந்தியாவுக்கு 66 ஆவது இடம் கிடைத்தது. இந்தியா சார்பில் 75 வீர வீராங்கனைகள் கலந்து கொண்டனர். இதில் துப்பாக்கி சுடும் வீரரான ராஜ்வர்த்தன் ரத்தோர் ஒருவர் மட்டுமே வெள்ளிப் பதக்கம் பெற்றார்.

75 நாடுகள் மட்டும் பதக்கம் பெற்றன. மீதியுள்ள 127 நாடுகள் பதக்கம் பெறவில்லை. 57 நாடுகள் மட்டுமே தங்கப் பதக்கங்களைக் கைப்பற்றியது.

கடைசி நாளான நேற்றுமுன்தினம் 17 தங்கப் பதக்கத்துக்கான போட்டிகள் நடந்தன. ஆண்களுக்கான மரதன் பந்தயத்தில் இத்தாலிக்குத் தங்கம் கிடைத்தது. அந்த நாட்டைச் சேர்ந்த ஸ்டெபானோ பால்டினி - 2 மணி 10 நிமிடம் 55 வினாடிகளில் கடந்து முதல் இடத்தைப் பிடித்தார்.

அமெரிக்க வீரர் மெப்ராட்டம் 2 ஆவது இடத்தையும், லிமா (பிரேசில்) 3 ஆவது இடத்தையும் பிடித்தனர்.

குத்துச்சண்டைப் போட்டியில் நேற்றுமுன்தினம் கியூபாவுக்கு 3 தங்கமும், அமெரிக்கா, ரஷ்யா, கஜகஸ்தானுக்கு ஒரு தங்கமும் கிடைததன.

ரிதமிக் ஜிம்னாஸ்டிக் பெண்கள் தனிநபர் பிரிவில் ரஷ்யாவுக்கு தங்கம் கிடைத்தது. அந்த நாட்டைச் சேர்ந்த அலினா கபேவா 108.4 புள்ளிகள் பெற்று முதலிடத்தைப் பிடித்தார். ஹாண்ட்போல் போட்டியில் குரோஷியா 26 - 24 என்ற கணக்கில் ஜெர்மனியைத் தோற்கடித்து தங்கம் பெற்றது.

பெண்கள் பிரிவில் டென்மார்க் 38:36 என்ற கணக்கில் தென் கொரியாவை வென்று முதலிடத்தைப் பிடித்தது. டேக்வாண்டோ போட்டியில் 67 கிலோ பிரிவில் சீனாவுக்கும், 87 கிலோ பிரிவில் கொரியாவுக்கும் தங்கம் கிடைத்தது.

கைப்பந்துப் போட்டியில் பிரேசில் 25-15, 24-26, 25-20, 25-22, என்ற செட் கணக்கில் இத்தாலியை வென்று சம்பியன் பட்டத்தைப் பெற்றது.

ரஷ்யா 25-22, 27-25, 25-16 என்ற நேர் செட் கணக்கில் அமெரிக்காவை வென்று வெண்கலம் பெற்றது.



சீன வீராங்கனை யூஹாங் வஜுக்கொண்டு அடிக்கும் பந்தைத் தடுக்கும் முயற்சியில் ரஷ்ய வீராங்கனைகள்.

கடந்த சனிக்கிழமை ஏதென்சில் நடைபெற்ற கரப்பந்தாட்ட இறுதிப் போட்டியில் ரஷ்யா 2 செட்கள் முன்னிலை பெற்றிருந்தும் தோல்வியுற்றது பரிதாபம்.

ஸ்கோர்: 28-30, 25-27, 25-20, 25-23, 15-12



தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றிய களிப்பில் ஒருவரையொருவர் கட்டித்தழுவும் அமெரிக்க மங்கைகள். ஏதென்சில் சனிக்கிழமை நடைபெற்ற மகளிருக்கான கூடைப்பந்து இறுதிப் போட்டியில் 74-63 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் அவுஸ்ரேலியாவைத் தோற்கடித்தது அமெரிக்கா.



தங்கப் பதக்கத்துடன் அணியாகப் பதக்க மேடையில் நிற்பவர்கள் ஆர்ஜென்ரீன உதைபந்தாட்ட வீராகள். சனிக்கிழமை நடைபெற்ற இறுதியாட்டத்தில் 1-0 என்ற கோல் கணக்கில் பரகுவேயை இவர்கள் தோற்கடித்தனர்.

# 28 ஆவது ஒலிம்பிக்கில் சீனாவின் விஸ்வரூபம்!

28 ஆவது ஒலிம்பிக் பல ஏற்றத் தாழ்வுகளைச் சந்தித்தபோதும், சீனாவின் விஸ்வரூபம் அனைத்து நாடுகளையும் ஆச்சரியப்படுத்தியுள்ளது என்றே கூறலாம்.

31 தங்கம், 17 வெள்ளி, 14 வெண்கலம் என்று மொத்தம் 62 பதக்கங்களை வென்று பதக்கப் பட்டியலில் இரண்டாவது இடத்தைப் பிடித்தது சீனா.

அடுத்த ஒலிம்பிக்கை நடத்தவுள்ள நிலையில் இந்த பதக்க அறுவடை சீனாவுக்கு மிகப்பெரிய ஊக்கத்தை அளித்துள்ளது என்றே கூறலாம்.

103 பதக்கங்களுடன் முதலிடத்தில் உள்ள அமெரிக்காவே பயப்படும் அளவுக்கு விளையாட்டில் வல்லரசாக சீனா உருவாகிக்கொண்டிருக்கிறது.

கடந்த 2000 ஆம் ஆண்டு சிட்னி ஒலிம்பிக்கில் 28 தங்கம், 16 வெள்ளி, 15 வெண்கலத்துடன் 58 பதக்கங்களை பெற்றது சீனா.

ஏதென்சில் 20 தங்கம் கிடைக்கும் என்று எதிர்பார்ப்புடன் வந்த சீனா தன்னுடைய திறமையைக் கண்டு பெருமிதம் கொண்டுள்ளது.

மற்ற நாடுகளைப் போலல்லாமல் உலகச் சம்பியன், நடப்புச் சம்பியன் போன்றவர்களை அனுப்பாமல் புதிய இளமைப் பட்டாளத்தை அனுப்பியது.

ஏதென்சில் மற்றொரு குறிப்பிடத்தக்க மாற்றம் - சீனா தனது வழக்கமான, வலுவான பிரிவுகளில் மட்டுமல்லாமல் மற்றப் பிரிவுகளிலும் பதக்கம் வென்றதுதான்.

மொத்தம் 12 பிரிவுகளில் தங்கம் வென்ற சீனா மேலும் 6 பிரிவுகளில் வெள்ளி மற்றும் வெண்கலத்தை வென்றுள்ளது.

# குத்துச் சண்டைப் போட்டியில் கியூபா 8 பதக்கங்களைப் பெற்றது!



(ஏதென்ஸ்)

ஒவ்வொரு ஒலிம்பிக் போட்டியிலும் குத்துச்சண்டையில் கியூபா ஆதிக்கம் செலுத்திவருகிறது. இதே போல ஏதென்சிலும் கியூபா குத்துச்சண்டையில் ஆதிக்கம் செலுத்தியது.

மொத்தம் 11 பிரிவுகளில் கியூபாவுக்கு 5 தங்கம் கிடைத்தது. அத்துடன் 2 வெள்ளியும், ஒரு வெண்கலமும் பெற்றது. அந்த அணிக்கு மொத்தம் 8 பதக்கங்கள் கிடைத்தன.

ரஷ்யா 3 தங்கம், 3 வெள்ளியுடன் 6 பதக்கங்களைப் பெற்று 2 ஆவது இடத்தைப் பிடித்தது. கஜகஸ்தான், தாய்லாந்து, அமெரிக்கா ஆகிய நாடுகள் தலா ஒரு தங்கப் பதக்கம் பெற்றன.

தடகளப் போட்டியில் அமெரிக்கா ஆதிக்கம் செலுத்தியது. மொத்தம் 46 பிரிவுகளில் போட்டி நடந்தது. இதில் அமெரிக்கா 8 தங்கம், 12 வெள்ளி, 5 வெண்கலம் ஆக மொத்தம் 25 பதக்கங்களைப் பெற்று முதலிடத்தைப் பிடித்தது.

ஆண்கள் பிரிவில்தான் அதிகபட்சமான 19 பதக்கங்கள் கிடைத்தன. பெண்கள் பிரிவில் 6 பதக்கமே கிடைத்தது.

ரஷ்யா 6 தங்கம், 7 வெள்ளி, 7 வெண்கலம் ஆக மொத்தம் 20 பதக்கங்களைப் பெற்று 2 ஆவது இடத்தைப் பிடித்தது. அந்த நாட்டு பெண்கள் அணி அதிகபட்சமாக 15 பதக்கங்களைக் கைப்பற்றியது.

இங்கிலாந்து, சுவீடன் அணிகளும் தலா 3 தங்கமும், எதியோப்பியா, கிரீஸ், கியூபா, ஜமேக்கா, மொரோக்கோ, இத்தாலி, ஜப்பான், சீனா ஆகிய நாடுகளுக்கு தலா 2 தங்கமும், கென்யா, உக்ரைன, பெலாரஸ், லிதுவேனியா, பஹாமஸ், செக் குடியரசு, போலந்து, கமரூன், டொமினிக்கன் குடியரசு, நோர்வே ஆகிய நாடுகளுக்கு தலா ஒரு தங்கமும் கிடைத்தது.




## இன்று நடைபெறவுள்ள

# அஸ்ரா கிண்ணத்துக்கான இரண்டாம் சுற்று ஆட்டங்கள்

(யாழ்ப்பாணம்)

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் அகில இலங்கை ரீதியில் பாடசாலைகள் 14 வயதுப் பிரிவு அணிகளிடையே நடத்தப்பட்டு வரும் அஸ்ரா கிண்ண கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இரண்டாம் சுற்று ஆட்டங்களுக்கு யாழ். மாவட்டத்திலிருந்து யாழ்.மத்திய கல்லூரி, யாழ்.இந்துக் கல்லூரி ஆகிய அணிகள் தகுதிபெற்றுள்ளன.

இந்தச் சுற்றுப்போட்டியின் இரண்டாம் சுற்று ஆட்டங்கள் இன்று யாழ் நகரில் நடைபெறவுள்ளன. இன்றையதினம் யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் யாழ். மத்திய கல்லூரி அணியை எதிர்த்து யாழ். இந்துக் கல்லூரி அணி மோதும் போட்டியும் -

சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில், சென். ஜோன்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி மோதும் போட்டியும் நடைபெறவுள்ளது.

இந்த இரு இரண்டாம் சுற்று ஆட்டங்களிலும் வெற்றி பெறும் அணிகள் - அஸ்ரா [illegible] றாம் சுற்று ஆட்டங்களில் [illegible] பாடசாலை அணிகளுடன் மோதும். (58)

## கிரிக்கெட் சுற்றுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

அராலி சரஸ்வதி விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்படவுள்ள மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் பங்குபற்ற விரும்பும் கழகங்கள் தமது பதிவினை - இல 101, கே.கே.எஸ் வீதியிலோ அல்லது அராலியிலுள்ள [illegible] மேற்கொள்ளலாம் என அராலி தெற்கு சரஸ்வதி விளையாட்டுக் கழகம் அறிவித்துள்ளது.

# 16 வயதுப் பிரிவு கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் விபரம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்கு மாகாணத்துக்கு உட்பட்ட மட்டக்களப்பு, வவுனியா, திருகோணமலை, யாழ்ப்பாணம், மன்னார் மாவட்ட 16 வயதுப் பிரிவு கிரிக்கெட் அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் சுற்றுப்போட்டி தம்புள்ளவில் நாளை முதல் 6 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இந்தச் சுற்றுப் போட்டியின் அட்டவணை வருமாறு -

நாளை மட்டக்களப்பு எதிர் வவுனியா - தம்புள்ள மத்திய மகா வித்தியாலய மைதானம், திருகோணமலை எதிர் யாழ்ப்பாணம் - தம்புள்ள சர்வதேச கிரிக்கெட் மைதானம்.

2.9.2004 வவுனியா எதிர் யாழ்ப்பாணம் - தம்புள்ள மத்திய மகா வித்தியாலய மைதானம், மன்னார் எதிர் மட்டக்களப்பு - தம்புள்ள சர்வதேச கிரிக்கெட் மைதானம்.

3.9.2004 திருகோணமலை எதிர் வவுனியா தம்புள்ள மத்திய மகா வித்தியாலய மைதானம், மட்டக்களப்பு எதிர் யாழ்ப்பாணம் - தம்புள்ள சர்வதேச கிரிக்கெட் மைதானம்.

4.9.2004 மன்னார் எதிர் வவுனியா - தம்புள்ள மத்திய மகா வித்தியாலய மைதானம், திருகோணமலை எதிர் மட்டக்களப்பு - தம்புள்ள சர்வதேச கிரிக்கெட் மைதானம்.

5.9.2004 மன்னார் எதிர் திருகோணமலை - தம்புள்ள மத்திய மகா வித்தியாலய மைதானம்.

6.9.2004 மன்னார் எதிர் யாழ்ப்பாணம் - தம்புள்ள மத்திய மகா வித்தியாலய மைதானம். (58)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசின் சமாதான கிராமமாக கப்பூது கிராமம் தெரிவு

அரசின் சமாதானத்தை கட்டியெழுப்பும் திட்டத்தின் கீழ் 'சமாதானக் கிராமமாக' யாழ்.குடாநாட்டிலிருந்து கப்பூது கிராமம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

யாழ்.அரச அதிபர் செ.பத்மநாதனின் கோரிக்கையின் பேரில், நீதி அரசியலமைப்பு, நல்லிணக்க அமைச்சு வடமராட்சி தெற்கு - மேற்கு பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட கப்பூது கிராமத்தை தெரிவு செய்துள்ளது.

இதனிடையே அரசின் சமாதானத்தைக் கட்டியெழுப்ப இந்தத் திட்டத்தின் பணிப்பாளர் பேராசிரியர் லக்சிறி பெர்ணான்டோவின் பணிப்பின் பிரகாரம் உயரதிகாரிகள் குழுவொன்று சம்பந்தப்பட்ட அந்தக் கிராமத்துக்கு நேற்று நேரில் விஜயம் செய்துள்ளது.

வடமராட்சி தெற்கு - மேற்கு பிரதேச செயலர் சிவலிங்கம் சத்தியசீலன் சகிதம், அமைச்சின் திட்ட அலுவலர்களான எல்.ஜெயவீர மற்றும் செல்வி மாலினி ஆகியோர் கப்பூது கிராமத்துக்கு நேரில் விஜயம் செய்ததுடன், மக்களின் தேவைகள் தொடர்பாகவும் கேட்டறிந்துள்ளனர்.

சுமார் 75 இற்கும் அதிகமான குடும்பங்கள் வசிக்கும் இந்தக் கிராமத்தில், சுயதொழில் முயற்சிகளை ஊக்குவித்தல், போக்குவரத்து சிரமங்களைத் தவிர்க்கும் வகையில், குயிலன்கண்டு வீதியை மீள் நிர்மாணித்தல் மற்றும் தொண்டமானாறு கடல் நீரேரியூடாக உட்புகும் கடல் நீரால், குடிநீர் உவர் நீராகுதல், விவசாய நிலங்கள் பயனற்றுப் போவதைத் தடுத்து நிறுத்துதல் உள்ளிட்ட முக்கிய பல முன் மொழிவுகள் - பிரதிநிதிகள் குழுவிடம் முன்வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.



புலோலி மெதடிஸ்த மிஷன் பாடசாலையில் கல்வியியற் கல்லூரி ஆசிரியர்களின் வழிநடத்தலின்கீழ் தயாரிக்கப்பட்ட ஆக்கப் பொருட்களைப் பாடசாலை ஆசிரியர்கள் பார்வையிடுவதைப் படத்தில் காணலாம். (14)

## மினி முகாமாக மாறிவரும் குறிகாட்டுவான் இறங்குதுறை

குறிகாட்டுவான் இறங்குதுறையின் பெரும் பகுதியை ஆக்கிரமித்து, கடற்படையினரால் மினிமுகாம் போன்ற அமைப்பில் சோதனைச்சாவடி அமைக்கப்பட்டுள்ளது.

இதனால், இந்த இறங்குதுறைக்கு வரும் வாகனங்களைத் திருப்புவதற்கும், பொருட்களை ஏற்றி இறக்குவதற்கும் சிரமமாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன், கடுமையாகச் சேதமடைந்துள்ள இந்த இறங்குதளம்- உடைந்து விழக்கூடிய அபாயமும் தோன்றியுள்ளது.

மற்றும் இந்த இறங்குதுறையில் பயணிக்கும் உல்லாசப் பயணிகளிடம் பெயர், முகவரி கேட்டுப் பதியப்படுவதுடன், நயினாதீவு இறங்குதுறையில் குடும்பத்தில் ஒருவரின் அடையாள அட்டை பெற்ற பின்பே உட்செல்ல அனுமதிக்கப்படுகின்றது.

அத்துடன், தென்னிலங்கையிலிருந்து இங்குவரும் உல்லாசப் பயணிகள் இந்த நடைமுறைகளுக்கு உட்படுத் தப்படுவதில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (99)

## நாகபூஷணி அம்மனுக்கு 99 அடியில் ராஜகோபுரம்

சரித்திரப் புகழ்பெற்ற நயினாதீவு ஸ்ரீநாகபூஷணி அம்மன் ஆலயத்துக்கு 99 அடி உயரமுள்ள ராஜகோபுரம் ஒன்றை அமைக்கும் திட்டத்தை தேவஸ்தான நிர்வாகசபை முன் வைத்துள்ளது.

இந்தத் திருத்தப்பணிக்கான நன்கொடைகள் அடியார்களிடமிருந்து கோரப்பட்டுள்ளது. (99)

## விழிப்புலன் வலுவிழந்தோருக்கு வாழ்வகத்தில் அனுமதி

(மானிப்பாய்)

சுன்னாகம் - சபாபதிப்பிள்ளை வீதியில் அமைந்துள்ள வாழ்வகம் விழிப்புல வலுவிழந்தோர் இல்லத்தில் பார்வைக்குறைபாடு உடைய மாணவர்களுக்கு அனுமதிகள் வழங்கப் படவுள்ளன.

கண்ணாடி அணிந்தும், எழுத வாசிக்க முடியாத, பார்வைக்குறைபாடுடைய பிள்ளைகளே இங்கு அனுமதிக்கப்படவுள்ளனர்.

தலைவர், வாழ்வகம், சபாபதிப் பிள்ளை வீதி, சுன்னாகம் என்ற முகவரியில் அமைந்துள்ள இந்த இல்லத்துடன் தொடர்புகொண்டு, விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாமென அறிவிக்கப்பட்டுள்ளது. (100)

## சங்க உறுப்பினர்களுக்கு கடன் வழங்க ஏற்பாடு

(மானிப்பாய்)

சில்லாலை கிராம அபிவிருத்திச்சங்க உறுப்பினர்களுக்கு சுழற்சி முறையிலான - சுயதொழில் முயற்சிக்கான கடன் வழங்குவதற்கென கியூடெக் நிறுவனம் ஒரு லட்சம் ரூபாவை வழங்கியுள்ளது.

கால்நடை வளர்ப்பு, விவசாயம், சிறு வியாபாரம் செய்வதற்கே தமது சங்க உறுப்பினர்களுக்கு இந்தக் கடனுதவி வழங்கப்படவுள்ளதாக சங்கத்தின் தலைவர் தெரிவித்தார். (100)

## நூலகக் கட்டடத்துக்கு கல்வியமைச்சு நிதியுதவி

கைதடி விக்கினேஸ்வரா வித்தியாலயதுக்கென, பொதுநூலகக் கட்டடம் அமைப்பதற்கு வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு 18 லட்சம் ரூபா நிதியை ஒதுக்கியுள்ளது.

தற்போது பொதுநூலகத்துக்கான ஆரம்ப வேலைகள் நடைபெற்று வருவதாகவும், வெகுவிரைவில் கட்டடப் பணிகள் பூர்த்தியடையுமெனவும் பாடசாலையின் அபிவிருத்திச் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. (100)

## புளியங்கூடல் கிளினிக்குக்குச் செல்லும் தாய்மாருக்கு சிரமம்

புளியங்கூடலில் தாய்சேய் நலவாழ்வு நிலையத்தில் மாதாந்தம் நடைபெறும் குழந்தைகள் சிகிச்சை நிலையத்துக்குச் செல்லும் தாய்மார்கள் - பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சிகிச்சை தினத்தன்று காலை 6 மணிக்கு முன்வந்து வரிசை இலக்க அட்டையைப் பெற்றுவிட வேண்டும் என்றும், அவ்வாறு வரும்போது தாய்மார்கள் தமது குழந்தைகளையும் கொண்டுவரவேண்டும் எனவும் கூறப்படுகின்றது.

எனவே, காலை 6 மணிக்கு முன் தமது கைக்குழந்தைகளுடன் வருகை தருவதில் தாம் பெரும் கஷ்டங்களை எதிர்கொள்வதாகத் தாய்மார்கள் தெரிவிக்கின்றனர்.

பிறப்புச் சான்றிதழ், கிளினிக் அட்டை போன்றன சான்றாக இருக்கும்போது, வரிசை இலக்க அட்டை பெறுவதற்கு குழந்தைகளுடன் ஏன் வரவேண்டும் என அவர்கள் கேள்வி எழுப்புவதுடன், இது தொடர்பில் உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் கோருகின்றனர். (99)

## தெல்லிப்பளை பிரதேச செயலகத்துக்கு புதிய செயலர்

(மானிப்பாய்)

வலி. வடக்கு தெல்லிப்பளை பிரதேச செயலகத்தில் புதிய பிரதேச செயலராக எழிலரசி அன்ரன் யோகநாயகம் நியமிக்கப்பட்டார்.

இதுவரை காலமும் பிரதேச செயலராக பதவிவகித்து வந்த கலாநிதி க.குணராசா யாழ்.மாநகர ஆணையாளராக நியமிக்கப்பட்டதையடுத்து, அந்த வெற்றிடத்துக்கே அவர் நியமிக்கப்பட்டார்.

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் உதவிப் பிரதேச செயலராக இவர் கடமையாற்றி வந்தமை குறிப்பிடத்தக்கது. (100)

## நயினாதீவில் குடிநீருக்கு தட்டுப்பாடு

தற்போது நிலவிவரும் கடும் வெப்பம் காரணமாக நயினாதீவில் குடிநீருக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

மழையின்மை காரணமாக இங்குள்ள ஒருசில நன்னீர்க் கிணறுகளும், உவர்த்தன்மையுடையனவாக மாறி வருகின்றது.

இங்கு வருகைதரும் பெருமளவு யாத்திரிகர்கள் குடிநீரைப் பெற பெரும் சிரமப்படுவதுடன், போத்தல்களில் அடைக்கப்பட்ட குடிநீரையே பெற்றுப் பருகிவருவதையும் காணமுடிகின்றது. (99)

## வீதியோர கற்குவியல்களால் போக்குவரத்துக்கு சிரமம்

யாழ்.ஊர்காவற்துறை பிரதான வீதியில், வீதித் திருத்தத்துக்கென சில மாதங்களாக ஆங்காங்கே குவிக்கப்பட்டிருக்கும் கற்குவியல்களால் போக்குவரத்துக்கு பெரும் இடைஞ்சல் ஏற்பட்டுள்ளது.

குன்றும் குழியுமாக காணப்படும் இந்த வீதியின் ஓரங்களில் குவிக்கப்பட்டிருக்கும் கற்குவியல்களுக்கு மேலாக வாகனங்கள் செலலும்போது, சிதறுண்டு நடுவீதிக்கு வந்துள்ள கற்களால் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதுடன், விபத்துக்கள் ஏற்படும் அபாயமும் தோன்றியுள்ளது.

இதன் காரணமாக வாகனசாரதிகள் தமது வாகனங்களை தரவைகள் ஊடாகவே செலுத்திவருகின்றனர்.

மழைக்காலம் ஆரம்பித்தால், இந்தத் தரவைகளும் பயன்படுத்த முடியாதநிலை தோன்றும்.

எனவே, இந்த வீதியை விரைவாக புனரமைத்துத் தரவேண்டும் எனவும் மக்கள் கருத்து தெரிவித்தனர்.

இந்த நிலையில் ஊர்காவற்துறை, குறிகாட்டுவான் ஆகிய இடங்களுக்கு சேவையில் ஈடுபடும் போக்குவரத்து சேவைகள உட்பட பெருமளவு உல்லாசப் பயணிகளும் இந்த வீதியைப் பயன்படுத்தி வருவது குறிப்பிடத்தக்கது. (99)

## பண்டத்தரிப்பு அம்மன் வீதி புனரமைப்பதற்கு ஏற்பாடு

வலி.தென்மேற்கு மானிப்பாய பிரதேசசபையின் பண்டத்தரிப்பு பட்டின உபஅலுவலகப் பிரிவில் அமைந்துளள அம்மன் வீதியைப் புனரமைப்பதறகு பிரதேசசபை நடவடிக்கை எடுத்துள்ளதாக சபையின் செயலாளர் பி.விக்டர் தெரிவித்தார்.

சுமார் இருபது வருடகாலமாகத் திருத்தப்படாதிருந்த இந்த வீதியைப் புனரமைப்புச் செய்வதற்கான கற்கள் கடந்தவாரம் பறிக்கப்பட்டுள்ளது. எனவே, இந்த வீதிப் புனரமைப்பு விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக செயலாளர் மேலும் தெரிவித்தார். (100)

## மகப்பேற்று விடுதி விஸ்தரிப்பு

யாழ்.போதனா வைத்தியசாலையின் மகப்பேற்று விடுதி அபிவிருத்தி செய்யப்பட்டு வருகிறது.

இங்கு புதிய விடுதிக் கட்டடங்கள் அமைக்கப்பட்டு, அவற்றுக்கு 'மாபிள்' பதிக்கும் வேலைகள் தற்போது இடம்பெற்று வருகின்றன.

இவை 8 மில்லியன் ரூபா செலவில் அபிவிருத்தி செய்யப்படுவதாக, வைத்தியசாலைப் பணிப்பாளர் எஸ்.சதுர்முகம் தெரிவித்தார்.

மகப்பேற்று சத்திரசிகிச்சைக் கூடமொன்று இங்கு திறப்பதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கவிருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## தென்மராட்சியில் இலவச கணினி பயிற்சி வகுப்பு

தென்மராட்சி சாவகச்சேரிப் பகுதியில் இலவச கணினிப்பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

அவுஸ்ரேலியாவிலுள்ள தென்மராட்சி அபிவிருத்திச் சங்கம், சாவகச்சேரி நகரசபை மற்றும் தென்மராட்சி நலன் சேவைகள் சங்கம் ஆகியன இணைந்து நடாத்தும் இந்த வகுப்புக்கள் - சாவகச்சேரி நவீன சந்தைக் கட்டடத்தில் நடைபெறவுள்ளன.

இந்தப் பயிற்சி வகுப்புக்களில் பங்குபற்ற விரும்புவோர் - இணைப்பாளர், தென்மராட்சி நலன்சேவைகள் சங்கம், இல.10 கண்டுவில்லேன், சாவகச்சேரி எனும் முகவரியுடன் தொடர்புகொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (29)

## ஓட்டோ விபத்தில் இந்து குருமார் காயம்

சங்கானை 7 ஆம் கட்டையடியில் கடந்த சனிக்கிழமையன்று இடம்பெற்ற ஓட்டோ விபத்தில் மூன்று இந்துக் குருமார்கள் படுகாயமடைந்தனர்.

வாகனம் ஒன்று விலகிச் செல்வதற்காக வழிவிட்டபோது, இவர்கள் ஓட்டிவந்த ஓட்டோ பாதையருகில் உள்ள மின்கம்பத்துடன் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

இதனை ஓட்டிவந்த இந்துக்குரு தனக்கேற்பட்ட தலைச்சுற்றினால் செய்வதறியாது மின்கம்பத்துடன் மோதவேண்டிய நிலை ஏற்பட்டதாகத் தெரிவித்தார்.

ஓட்டோ விபத்துக்குள்ளானதில், சாரதியாக வந்த இந்துக்குரு வீதியில் தூக்கி வீசப்பட்டு, படுகாயமடைந்தார்.

இந்த ஓட்டோ இந்து கலாசார அமைச்சின் முன்னாள் அமைச்சர் தி.மகேஸ்வரனால் சர்வதேச குருமார் ஒன்றியத்துக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டதென்பது குறிப்பிடத்தக்கது. (48)

## தொழில் நியாய சபைச் செயலாளர் பதவிக்கான விண்ணப்பம் கோரல்

(மானிப்பாய்)

நீதி மற்றும் நீதித்துறை மறுசீரமைப்பு அமைச்சின் கீழுள்ள தொழில் நியாயச் சபைச் செயலாளர் பதவிக்கான விண்ணப்பம் நீதி மற்றும் நீதித்துறை மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளர் சுகததே கமலத்தினால் கோரப்பட்டுள்ளது.

விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை உரிய முறையில் பூரணப்படுத்தி, விண்ணப்பிக்கும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "தொழில் நியாயச் சபைச் செயலாளர் பதவி" எனக் குறிப்பிட்டு, செயலாளர், நீதி மற்றும் நீதித்துறை மறுசீரமைப்பு அமைச்சு கொழும்பு-12 என்ற முகவரிக்கு எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 17 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கும்படி கேட்கப்பட்டுள்ளது.

இதன் மேலதிக விபரங்களை, கடந்த 27 ஆம் திகதி அரச வர்த்தமானியைப் பார்வையிடலாம். (100)


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

இரண்டாவது அகவையில்



பெயர் : பி.பிரவீனா
முகவரி : சுவிஸ்

எட்டாவது அகவையில்



பெயர் : ச.சிவோதயன்
முகவரி : மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி.

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :
முகவரி :
பிறந்த ஆண்டு:



கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

பெற்றோர் ஒப்பம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஸ்மார்ட் போன்கள்

நாளுக்கு நாள் கையடக்கத் தொலைபேசிப் பாவனையாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதுபோல, கையடக்கத் தொலைபேசிகளின் வகைகளும் புதிது புதிதாக அதிகரித்துக்கொண்டே செல்கின்றன. ஆனாலும் மக்கள் புதிய வகைத் தொலைபேசிகளை விரும்புகிறார்கள். அவர்கள் பழைய விலையில் கேட்கின்றார்கள்.



தற்போது சந்தைக்கு வந்திருக்கின்ற ஸ்மார்ட் போன்களில் ஈ.மெயில், மல்ரிமீடியா தகவல்கள் கமெரா, கேம்ஸ், வீடியோ, மற்றும் மியூசிக் பிளேயர் ஆகியன காணப் படுகின்றன. ஆனாலும் இவற்றை எல்லாம் இயங்க வைக் கக்கூடிய மின்கலங் கள் எந்தளவுக் குத் தாக்குப் பிடிக்கும் என் கின்ற கேள்வி எழுந்திருக்கின் றது. அண்மை யில் உலகச் சந்தையை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கின்ற மொபைல் தொலைபேசிகள் வரிசையில் எக்ஸ்டி ஏ 2, நொக் கியா, 6600, சொனி எரிக்சன் பி 900, ஒரேஞ்ச் ஈ 200,ஆகியன முன்னிலையில் திகழ் கின்றன. சிறிய கையடக்கத் தொலைபேசிகளுக்கு இந்தவகைக் கணினி அந்தஸ்து வழங்கும்போது அங்கே காணப்படுகின்ற சிஸ்டம் மிகவும் சிக்கலானதாக இருக்கும் என மைக்கிறோ சொவ்ட் நிறுவனம் கருத்து வெளியிட்டிருக்கின்றது.

தற்போது 117 மில்லியன்களாக இருக்கின்ற கையடக்கத் தொலைபேசிப் பாவனை 2009 ஆம் ஆண்டளவில் மேலும் அதிகரிக்கும் என தொழில் நுட்ப வியலாளர்கள் கருதுகின்றார்கள்.

# நீரின்றி இறைச்சியும் இல்லை!

உலகில் நீருக்கு ஏற்பட்டுவரும் மோசமான தட்டுப்பாட்டினால், மேற்குலகு விரைவில் கால்நடை இறைச்சி உணவுத் தட்டுப்பாட்டை எதிர்கொள்ளும் என சுவீடன் நாட்டின் உணவுற்பத்தி நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.



தற்போது இறைச்சி உணவு மற்றும் பால் உணவுப் பொருட்க ளுக்கான கிராக்கி தாங்க முடியாத அளவு அதிகரித்து வருவதா கவும், இத்தகைய கிராக்கியை சமா ளிக்க அதிகளவில் கால்நடைகளை வளர்ப்பதற்கு நீர் தட் டுப்பாடு மோசமான தடையாக இருப்ப தாகவும் இந்த நிபு ணர்கள் சுட்டிக்காட்டு கின்றனர். வருடாந்தம் சுவீடன் தலைநகர் ஸ்ரொக் ஹோமில் உலக நீர் வாரம் தொடர்பான மாநாடு நடைபெறுவது வழமை. அத்தகைய மாநாடு கடந்த வாரம் நடைபெற்றது.

உலகில் சுமார் 840 மில்லியன் பேர் போதியளவு உணவின்மையால் அவதிப்படுவதாக இந்த மாநாட்டில் எச்சரிக்கப்பட்டுள்ளது.

2025 ஆம் ஆண்டில் இது மேலும் இரண்டு பில்லியனால் அதிகரிக்கும் எனவும் கூறப்பட்டுள்ளது. உலகில் அதிகரித்து வரும் சனத்தொகைக்கேற்ப பயிர் செய்வதும், அதற்கு நீர் விநியோகிப்பதுமே இன்றுள்ள மிகப்பெரிய சவால் என அந்த மாநாடு கூறுகிறது.

ஒரு காலத்தில் உணவு உற்பத்தியைவிட சனத்தொகைப் பெருக்கம் அதிகமாக இருந்தது.

இப்போது உணவு உற்பத்திக்கான நீரைப் பெறுவது மிகக் கடினமான விடயமாக மாறி வருகிறது எனவும் அதில் கூறப்பட்டுள்ளது.


கால்நடைகளுக்கும் உணவைவிட அதிகளவு நீரே தேவைப்படுகிறது. அதேசமயம் இவற்றின் இறைச்சிப்பாவனை அதிகரித்தும் வருகிறது. மக்கள் போசனைப் பொருட்களைப் பெற்றுக் கொள்வதை நாம் தடுக்க முடியாது.

ஆனால், இதற்கு என்ன மாற்றுவழி என சிந்திக்கும் நிலையும் ஏற்படவில்லை என நிலைமையின் சிக்கல் தன்மையை விபரிக்கின்றனர் உணவுற்பத்தி ஆய்வாளர்கள்.

அவுஸ்ரேலியர்கள் போதிய நீரின்றி அவதியுறும் நிலையிலும், இறைச்சியை நீர்போல் ஏற்றுமதி செய்வதையும் இங்கு குறிப்பிட்டேயாக வேண்டும்.

# துருவத்திலிருந்து

உலகின் மிகச்சிக்கலான பிரதேசங்களாக விளங்குவன ஆர்ட்டிக் மற்றும் அந்தாட்டிக் பிரதேசங்கள். அதிலும் அந்தாட்டிக் பிரதேசத்தில் காணப்படுகின்ற பனி மலைகள் மிகவும் பயங்கரமான காலநிலை மாற்றங்களுக்கு காரணமாகின்றன. பூமியினுடைய வெப்ப அதிகரிப்பையும், வெப்ப வீழ்ச்சியையும் இந்தத் துருவப் பகுதிகள்தான் தீர்மானிக்கின்றன என்ற கருத்துப் பரவலாக நிலவி வருகின்றது.



உலகிலே காணப்படுகின்ற 12 வெப்பம் அதிகமான இடங்களுக்கும், இந்தத் துருவப் பகுதிகளுக்குமிடையே காலநிலை மாற்றத்தில் தொடர்பு இருக்கின்றது. பெரும்பாலும் மொன்சூன் காற்றுகள் இங்கேயே உருவாகின்றன.


அதிலும் பனி மலைகளிலிருந்து உருவாகும் காற்றுகள் மிகவும் வேகமாக வீசக்கூடியவை.

இவற்றின்மூலம் சூறாவளி, பாரியவெள்ளப்பெருக்கு ஆகியன தோற்றம் பெறுகின்றன. இப்போது நாஸா விண்வெளி ஆய்வு மையம் துருவப்பகுதியின் காலநிலை மாற்றங்களை ஆராய்ந்து கொண்டுவருகின்றது.

இதன்மூலம் துருவப்பகுதியில் ஏற்படுகின்ற காலநிலை மாற்றங்களின் மர்மங்களைத் துல்லியமாக ஆராய முடியும் என விஞ்ஞானிகள் நம்புகின்றார்கள்.

# மார்புப் புற்றுநோய்

மார்புப் புற்றுநோய் வந்திருக்கிற பெண்கள் தற்போது புதிய சிக்கல் ஒன்றை எதிர் நோக்கியிருக்கின்றார்கள். சிலவேலைகளில் மார்புப் புற்றுநோயை ஸ்கான்பண்ணும்போது, சில பெண்களுக்கு அதனுடைய அடையாளம் காணுவது கடினமாகவுள்ளது.



இதற்குக் காரணம் பெண்களின் மார்பில் சுரக்கின்ற சில ஓமோன்கள் ஆகும். இதேவேளை - 50 வயதுக்கும் 64 வயதுக்கும் இடைப்பட்ட 120,000 பெண்களை ஆராய்ந்து பார்த்தபோது, அவர்களில் புற்றுநோய்க்கான ஸ்கானிங் எடுபடவில்லை. இப்படியான புற்றுநோயாளிகளுக்குச் சிகிச்சையளிப்பது கடினம்.

ஆகவே, அவர்களுக்கு ஓமோன் சிகிச்சை கொடுக்க வேண்டிய தேவையிருக்கிறது. அவர்களுடைய மார்பில் ஓமோன்கள் அதாவது புற்றுநோயை எதிர்க்கின்ற ஓமோன்கள் ஊசிமூலம் ஏற்றப்படுகின்றன. ஐரோப்பிய நாடுகளிலுள்ள எல்லாப் பெண்களும் 50 வயதுக்கு மேல் தங்களுடைய மார்புகளை ஸ்கான் செய்துபார்க்கின்றார்கள். அதேவேளை - ஸ்கானிங் மூலம் திருப்தியடையாதவர்கள் ஓமோன் பரிசோதனையும் செய்கின்றார்கள்.

# இரசாயனக் கண்ணாடி

பெரிய கட்டடங்கள் கண்ணாடிகளால் கட்டப்படுகின்றன. இப்படிக்கட்டுவதால் செலவு குறைவு. அத்துடன், கண்ணைக் கவரக்கூடியதாகவும் இருக்கும். ஆனாலும் வானுயர்ந்த கட்டடங்களில் கண்ணாடிகளுக்குள் வெப்பம் - பகல் வேளைகளில் அதிகமாகவும் எரிச்சல் தரக்கூடியதாகவும் இருக்கின்றது. இதன் காரணமாக குளிரூட்டிகள் அதிகம் பாவிக்கப்படுவதால், அவை இலகுவில் பழுதடைகின்றன. இங்கே பாவிக்கப்படுகின்ற சாதாரண கண்ணாடிகளுக்குப் பதிலாக விசேட வகைக் கண்ணாடிகள் பாவிக்கப்படுகின்றன. ஐரோப்பிய நாடுகளில் இந்தவகைக் கண்ணாடிக் கட்டடங்களைக் காணக் கூடியதாகவுள்ளது.



இந்தக் கண்ணாடிகள் வனேடியம் ஒக்சைட்டினால் ஆக்கப்பட்டிருக்கின்றன. இவை சூரிய ஒளியைத் தெறிக்க வைக்கக்கூடியவையாக இருக்கின்றன. இதன் காரணமாக வெப்ப ஊடுருவல் குறைவாகவுள்ளது. இப்போது இவை ஜப்பானின் டோக்கியோ நகரிலுள்ள கட்டடங்களிலும் அதிகம் பாவிக்கப்பட்டுவருகின்றன.

இதேவேளை - இந்தக் கண்ணாடிகள் மஞ்சள் நிறமாக இருப்பதால், கட்டடத்தினுள் அழகு குறைவாக உள்ளதாக தொழில்நுட்பவியலாளர்களும், கட்டடக்கலைஞர்களும் கவலைப்படுகின்றார்கள். ஆனாலும், வனேடியம் ஒக்சைட் பூசப்பட்ட கண்ணாடிகளினால் கட்டடத்தின் [illegible] உபகரணங்கள் பழுதடைவது குறைவாகவே உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திரை விமர்சனம்

# 4 ஸ்ருடண்ட்ஸ்

வழமையான கதாநாயகன், கதாநாயகி ஆகியோரை நம்பாமல் எடுக்கப்பட்ட படம்தான் 4 ஸ்ருடண்ட்ஸ். நான்கு புதிய கதாநாயகர்கள் இதில் தோன்றுகின்றார்கள். தமிழ்ப் படம் ஒன்றுக்கு ஆங்கிலத் தலைப்பு இடுகின்ற தற்போதைய பாணியில் இந்தப்படத்தின் தலைப்பு இடம்பெற்றிருக்கின்றது.

சமூகத்தில் புரையோடிப்போயிருக்கும் லஞ்சம் என்ற சமூகவிரோதச் செயலை தண்டிப்பதற்கு, அதனைத் தட்டிக்கேட்பதற்கு நான்கு இளைஞர்கள் வருகின்றார்கள்.



லஞ்சம் வாங்குபவர் எவராயினும் அவருக்கு அவரது லஞ்சம் வாங்கிய கைவெட்டப்படுகிறது.

சமுகத்தில் இவ்வாறு மாணவர்கள் செய்துவரும் செயல்கள் நியாயமாக்கப்பட்டாலும், சட்டம் அதற்கு இடம்கொடுக்காது. எனவே இவர்களைப் பிடிப்பதற்கு வருகின்றார் பொலிஸ் அதிகாரி ஒருவர்.

நான்கு மாணவர்களின் செல்வாக்கைக் குறைக்கும் நோக்கில் மத்திய மந்திரியால் நடத்தப்படுகின்ற கொலைச் செயல்கள் அவை நான்கு மாணவர்கள் மீதும் பழிபோடப்படுகின்றன.

சாதாரணமானவர்களுக்கு தண்டணையாகக் கையை எடுத்தவர்கள் மந்திரியின் தவறுக்கு உயிரையே எடுக்க முனைகின்றார்கள்.

படத்தின் முடிவு பார்ப்பவர்கள் நெஞ்சை "படபட"என வைக்கும் ஒரு அற்புதமான நடிப்பாக அமைகின்றது.



பரத், அருண், அர்ஜுன், பத்மகுமார் ஆகியோர் 4 ஸ்ருடண்ட்ஸ் ஆக நடித்திருக்கிறார்கள். பொலிஸ் அதிகாரியாக சுனில் நடித்திருக்கிறார்.

படத்தின் கதை சமீப காலத்தில் வெளிவந்த இந்தியன், சிட்டிஷன், சாமுராய், ரமணா, போன்றபடங்களின் வரிசையில் அமைந்தாலும், நல்ல திரைக்கதையாலும், புதிய உத்திகளாலும் படத்தை ரசிக்கும்படி இயக்கி இருக்கிறார் இயக்குனர் ஜெயராஜ்.

அலுவலரின் வீட்டை தங்கை உதவியுடன் பயன்படுத்தி, தமது நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர் 4 மாணவர்களும் என்பது இயக்குநர்விட்ட கோட்டையாக அமைந்தாலும், படத்தின் கிளைமாக்ஸை நன்றாக அமைத்து, இந்தத் தவறை ஈடு செய்திருக்கின்றார்.

ஆர்.டி.ராஜசேகரின் அற்புதமான ஒளிப்பதிவை படத்தொகுப்பாளர் அன்ரனி மேலும் மெருகேற்றியுள்ளார்.

பழனிபாரதி ரா.முத்துக்குமார் பாடல்களுக்கு ஜாஸ்சி சிம்ட் சிறப்பாக இசையமைத்திருக்கிறார்.

'லஜ்ஜாவதியே' என்ற பாடல் நிச்சயம் பிரபல்யமான பாடலாக அமையுமெனக் கூறலாம்.

மலையாளத்தில் 4 தி பீப்பிள் என்ற பெயரில் வெளிவந்த படத்தின் தமிழ் வடிவமே 4 ஸ்ருடண்ட்ஸ் என்ற பெயரில் தமிழில் வெளிவந்துள்ளது. வசனத்தில் கோகுலகிருஷ்ணா மலையாள வாடையை முடிந்த வரை குறைத்துள்ளார்.

திரைக்கதை ஒளிப்பதிவு கிளைமாக்ஸ் என்பவற்றுக்காக படத்தைப் பார்க்கலாம்.

- நகுல் -

# செய்மதிப் புகைவண்டி


தற்போது இங்கிலாந்தின் தெற்குப் பிராந்தியத்தில் ஓடுகின்ற புகைவண்டிகளுக்கு புதியவகைத் தொழில்நுட்பம் புகுத்தப்பட்டிருக்கின்றது. புகைவண்டியில் காணப்படுகின்ற எல்லாக் கதவுகளும் செய்மதிகள் மூலம் கட்டுப்படுத்தப்படக்கூடியனவாக இருக்கின்றன.



சில வேளைகளில் புகைவண்டிகள் விபத்தைச் சந்திக்கும்போது, தன்னிச்சையாக இந்தக் கதவுகள் திறக்கின்றன. இதன்காரணமாக மக்கள் பாரிய அழிவிலிருந்து தப்பக்கூடியதாக இருக்கின்றது. ஆரம்பத்தில் சில புகைவண்டிகள் மட்டுமே இந்தவகையான தொழில்நுட்பத்தினால் இயங்கின. ஆனால், தற்போது 1700 புகைவண்டிச் சேவைகள் இந்தவகையான செய்மதித் தொழில்நுட்பத்தினால், தற்போது இயங்கக்கூடியனவாக இருக்கின்றன. ஆனாலும், இந்தப் புகைவண்டிகள் பழுதடையும் பொழுது பழுதுபார்ப்பது மிகக் கடினமாகின்றது. ஒரு புகைவண்டி நிலையத்தில் புகைவண்டி நிறுத்தப்படும்பொழுது கதவுகள் தன்னிச்சையாகத் திறந்துமூடும் ஆற்றல் கொண்டவையாக உள்ளன. இதன் காரணமாக திருடர் பயமும் புகைவண்டிகளில் வெகுவாகக் குறைந்திருக்கின்றன.

# பூமியைப் போன்ற கிரகங்கள்

பூமியைப் போன்ற மிகச்சிறிய அளவுடைய கிரகம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஆனால் இது எங்களுடைய சூரியக் குடும்பத்துக்கப்பால் காணப்படுகின்றது. ஒப்பீட்டளவில் மிகச் சிறியதாகவும் ஆனாலும், பூமியைப்போன்று 14 மடங்கு உடையதாகவும் காணப்படுவதாக விண்வெளி ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றார்கள். ஆனாலும் இந்தக் கிரகத்தில் ஐஸ்கட்டிகள் காணப்படுவதாகவும் கூறப்படுகின்றது. லாசிலலா என்ற இடத்தில் காணப்படுகின்ற 3.6 மீற்றர் ஆரையுடைய தொலைநோக்கியால், ஐரோப்பிய விண்வெளி ஆராய்ச்சி நிலையத்தின் ஆய்வாளர்கள் இந்தக் கிரகத்தை உற்றுநோக்கியிருக்கின்றார்கள். ஆனாலும் பூமி போன்ற ஒரு கிரகம் மியூஆர் என்ற விண்வெளி ஆய்வாளரினால் கண்டுபிடிக்கப்பட்டது. அது 650 நாட்கள் சுற்றல் காலத்தையுடையது. இதேவேளை, புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட கிரகம் தன்னைத் தானே சுற்ற எடுக்கும் நேரம் ஏறக்குறைய 9.5 நாட்களாகும் என ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள். இப்போது உலகம் முழுவதிலும் இருக்கின்ற விண்வெளி ஆய்வுமையங்கள் பூமியைப் போன்ற கிரகங்களைக் கண்டுபிடிப்பதில் ஊக்கமாக இருக்கின்றன.



# 2035 இல் அதிவேக கணினி

உங்கள் மேசையிலுள்ள பேனா இன்னுமொரு இடத்துக்கு வேறு உதவியில்லாமல் போவதற்கு முடியுமா?

இதுவரை காலமும் இவ்வாறான செயற்பாடுகள் முடியாததென்றே கூறி வந்தனர். ஆனால் முடியாததென்று இனிமேலும் கூறிவிட முடியாது.

அமெரிக்கா மற்றும் ஒஸ்ட்ரியாவைச் சேர்ந்த விஞ்ஞானிகள் இது தொடர்பான ஆராய்ச்சிகளில் ஈடுபட்டுவருகின்றனர்.



இவர்களின் முயற்சியால் வேகமான கணினி ஒன்றின் அறிமுகம் ஏற்படப்போகின்றது.

ஒரு அணுவிலிருந்து இன்னொரு அணுவுக்கு ஒரு கியூபைட்சை கொண்டு செல்ல முடிந்துள்ளமை ஆராய்ச்சிகளுக்கு கிடைத்த முதல் வெற்றியாகக்கொள்ள முடிகின்றது. பாதி செக்கனளவில் இந்த செயற்பாட்டை நிறைவேற்றியுள்ளனர்.

'கவன்டம்' எனப்படும் இத்தகைய பரிசோதனைகளுடன் தொடர்புடைய விஞ்ஞானி பின் கொயிலாம் கருத்தொன்றை இது தொடர்பாக வெளியிட்டுள்ளார்.

2035 ஆம் ஆண்டளவில் அதிவேகமான கவன்டம் கணினிகளைத் தயாரிக்கலாம் என்பதே அவரது கருத்தாகும்.

இந்தக் கணினியின் உருவாக்கத்தின்மூலம் அனுப்பக்கூடிய தகவல்களின் அளவு அதிகரிக்கும். இந்தக் கணினியில் பயன்படுத்தப்படும் 'ரான்சிஸ்ரரின்' அளவு அணுவை விடவும் சிறிதாக இருக்கும்.

தற்போது செயற்படும் கணினியின் வேகத்தைப்போல் மில்லியன் கணக்கான வேகத்தில் புதிய கணினியின் செயற்பாடு அமையவுள்ளது.

# மலிவான எரிபொருள்

உலகளாவிய ரீதியில் பெற்றோலியப் பொருட்களின் விலை அதிகரித்துக் கொண்டே செல்கின்றது. அது குறைவது போலத் தெரியவில்லை. இதன் காரணமாக ஐரோப்பிய விஞ்ஞானிகள் சூரியகாந்திப் பூக்களிலிருந்து ஒரு வகையான எரிபொருளைத் தயாரிக்கலாம் என்று கூறிக் கொண்டிருக்கின்றார்கள்.



இது ஐதரசன் வாயு எரிபொருளாக இருக்கும் எனக் கருதப்படுகின்றது. லீட்ஸ் பல்கலைக்கழகத்திலுள்ள விஞ்ஞானிகளும், தொழி நுட்பவியலாளர்களும் சேர்ந்து வெற்றிகரமாக ஐதரசன் வாயு எரிபொருளால் இயங்கும் கார்களை ஓட வைத்திருக்கின்றார்கள். இந்த வாயு எரியும்போது, காபனீரொட்சைட் கழிவு வாயு வருவது குறைவு. இதே முறையைப் பின்பற்ற அமெரிக்க இரசாயனக் கழகமும் தயாராகிக் கொண்டு வருகின்றது. ஒப்பீட்டளவில் பெற்றோலியப் பொருட்களிலும் பார்க்க இந்த ஐதரசன் எரிபொருளின் விலை குறைவாகும். உண்மையில் இது மரக்கறி எண்ணெய் போன்றது. ஆனால் இதனுடைய தடிப்புக்காரணமாகப் பெரிய எரிபொருள் தாங்கிகள் தேவைப்படுகின்றன. இதனுடைய மலிவு பலரை மூக்கில் விரலை வை[illegible]

# எரியும் ஐஸ்



நெருப்பையும், பஞ்சையும் ஒன்றாக வைத்தால் எரியும் என்பது தெரிந்த விடயம். ஆனால், ஐஸ் கட்டிகளையும், நெருப்பையும் ஒன்றாக வைத்தால் என்ன நடக்கும்?

பார்த்தவுடனேயே இந்த ஐஸ்கட்டிகள் நீரில் மிதப்பவையாக இருப்பதாக நீங்கள் நினைக்கலாம். ஆனால், இவை எரியும் ஐஸ்கட்டிகள் (Burn ice) என்று கூறினால் உங்களுக்கு நம்பக் கஷ்டமாக இருக்கும். இது உண்மை. ஜப்பானில் பிரபல்யமான மெழுகுவர்த்தி செய்யும் நிறுவனம் ஒன்றினால் இந்தவகையான ஐஸ்கட்டிகள் தயாரிக்கப்படுகின்றது. இந்த எரியும் ஐஸ்கட்டிகள் சிவப்பு நிறமான டின் ஒன்றில் பொதிசெய்யப்பட்டுள்ளது. இதைத் திறப்பதற்கு டின் கட்டர் உபயோகிக்க வேண்டும். டின் ஒன்றில் நான்கு ஐஸ்கட்டிகள் உள்ளன. பெரபின் உபயோகித்துத் தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்த ஐஸ்கட்டி மெழுகுவர்த்தியை எரிப்பதற்கு நீங்கள் விரும்பினால், கிளாஸ் ஒன்றுக்குள் இந்த ஐஸ்கட்டியைப் போட்டு எரிக்கவேண்டும். இது சாதாரணமாக மூன்று மணித்தியாலங்கள் எரியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வருடாந்த மஹோற்சவம்

பன்னாலை வரத்தலம் கற்பக விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து பன்னிரு தினங்கள் நடைபெறும் உற்சவத்தில், 12 ஆம் திகதி சப்பறத் திருவிழாவும் 13 ஆம் திகதி திங்கட்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் செய்வாய்க்கிழமை தீர்தத உற்சவமும் இடம்பெறும்.(72)

## சமுர்த்தி உத்தியோகத்தருக்கு விவசாயப் பயிற்சி

பருத்தித்துறை, கரவெட்டிப் பிரதேச செயலக சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கான விவசாயப் பயிற்சி - திருநெல்வேலியிலுள்ள விவசாயப் பயிறசி நிலையத்தில் நாளை மறுதினம் ஆரம்பமாகி, 4 ஆம் திகதி வரை மூன்று நாட்கள் தொடர்ந்து நடைபெறவுள்ளது. இந்தப் பயிற்சிநெறியில் பருத்தித்துறை உத்தியோகத்தர் 20 பேரும், கரவெட்டி உத்தியோகத்தர் 20 பேரும் கலந்துகொள்ளவுள்ளனர். (15)

# சாரதி அனுமதிப் பத்திரம் பெற உதவுமாறு செவிப்புலனற்றோர் சங்கம் கோரிக்கை

அண்மையில் யாழ்ப்பாணம் கலட்டியில் நடைபெற்ற செவிப்புலனற்றோர் நிறுவனத்தின் ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்ட, செவிப்புலனற்றோர் சங்க உறுப்பினர்கள் - யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், சங்கத்தின் போசகரான சட்டத்தரணி கே.ரி.சிவலிங்கம் ஆகியோரிடம் மோட்டார் சைக்கிள் செலுத்துவதற்கான சாரதி அனுமதிப்பத்திரத்தை தாம் பெற்றுக் கொள்வதற்கு உதவி புரியுமாறு கேட்டுக்கொண்டனர்.

மோட்டார் சைக்கிள் செலுத்துவதற்கு தமக்கு ஆசைகள் இருப்பதாகவும், குடும்பத்தினரை - மனைவி பிள்ளைகளை மாலை வேலைகளில் மோட்டார் சைக்கிள்களில் உறவினர் வீடுகளுக்கு ஏற்றிச் செல்வதற்கு தமக்கும் விருப்பங்கள் இருப்பதாகவும், தாம் நல்ல தேகாரோக்கியத்துடன் இருந்தபோதும், தமக்கு சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்கு அனுமதி தரப்படுவதில்லை என செவிப்புலனற்றோர் சங்க உறுப்பினர்கள் கவலை தெரிவித்தனர்.

வசதி வாய்ப்புகளைப் பயன்படுத்தி, தங்களில் ஒரு சிலர் சாரதி அனுமதிப் பத்திரம் பெற்றிருக்கின்றனர்.

எம்மில் பலரிடம் அவ்வாறான வசதிவாய்ப்புக்கள் இல்லாதபடியால், இதுவரை சாரதிஅனுமதிப் பத்திரம் பெற முடியாதவர்களாக இருக்கின்றோம்.

இதுவரை காலமும் வாய்பேசுபவர்கள் விபத்துக்களை பெரியளவில் சந்தித்து வரும்போது, எமது உறுப்பினர்கள் இதுவரை விபத்துக்கள் எதனையும் ஏற்படுத்தவோ, முகம் கொடுக்கவோ இல்லை என்பது குறிப்பிடக்கூடிய ஒரு விடயம்.

எனவே நாமும் சாரதி அனுமதிப் பத்திரம் பெற்றுக்கொள்ள தயவு செய்து உதவிபுரியுங்கள் என அவர்கள் வேண்டுகோள் விடுத்தனர்.

இவர்களது கோரிக்கைக்கு பதிலளித்த நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் -இந்தப் பிரச்சினையை தான் முன்னெடுப்பதற்கு இது பற்றிய விபரங்களை முழுமையாகத் தந்துதவும்படியும், அவற்றினடிப்படையில் தான் நடவடிக்கை எடுத்துதவுவதாகவும் குறிப்பிட்டார். (31)

## மீளக் குடியமர்வுக் கொடுப்பனவு இன்னமும் வழங்கப்படவில்லை

வடமாரட்சி கிழக்கில் மீளக் குடியமர்ந்தவர்களுக்கான மீள்குடியமர்வு நிதி இன்னும் வழங்கப்படவில்லை என அந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவித்தனர்.

இவர்களுக்கான மீள் குடியமர்வு நிதி வழங்கவென, யாழ்.செயலகத்திலிருந்து அதிகாரிகள் விண்ணப்பங்களில் கையொப்பம் பெற்றுச் சென்று, ஆறு மாதங்கள் கடந்தும் இன்னும் நிதி வழங்கப்படவில்லை.

கையொப்பம் இட்டபோது, 15 நாட்களில் மீளக்குடியமர்வுக் கொடுப்பனவு வழங்கப்படும் என்று கூறியிருந்தபோதிலும், ஆறுமாதங்கள் கடந்தும் கொடுப்பனவு வழங்கப்படவில்லை எனப் பாதிக்கப்பட்ட மக்கள் கவலை தெரிவித்தனர். (14)



நெடுந்தீவுப் பிரதேச செயலகர் பிரிவில் யு.என்.எச்.சி.ஆர் நிறுவனத்தால் வழங்கப்பட்ட வீட்டுப் பாவனைப் பொருட்களை யு.என்.எச்.சி.ஆர் பிரதிநிதிகள் பொதுமக்களுக்கு வழங்குவதைப் படத்தில் காணலாம். (113)

## வண்ணார்பண்ணை வீதியில் பாலம் புனரமைக்கப்படுகிறது

வண்ணார்பண்ணை வடமேற்கு வீதியிலுள்ள பாலம் புனரமைப்பு செயயப்பட்டு வருகிறது.

நீண்டகாலமாகப் பாழடைந்து, குழிகளுடன் காணப்பட்ட இந்தப் பாலமானது, தற்போது துரிதமாகக் கட்டப்பட்டு வருகிறது.

இதனால் மழை காலங்களில், சூழலிலுள்ள வீடுகளில் நீர் தேங்குவது தவிர்க்கப்படுவதுடன், கடந்த காலங்களில் நீர்தேங்கி நிற்பதால் நுளம்புப் பெருக்கத்துக்கும் காரணமாகி, டெங்கு அபாயமும் ஏற்பட்டது.

ஆனால், தற்போது நுளம்புப் பெருக்கம் கட்டுப்படுத்தப்படவுள்ளதால், நோய் பெருகும் அபாயம் தவிர்க்கப்பட்டுள்ளதாக அந்தப் பகுதி மக்கள் நிம்மதியடைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (100)

## ஒந்திராய் குளம் புனரமைப்பு

வடமராட்சியில் நியாப் திட்டத்தின் கீழ் புனரமைக்கப்படும் குளங்கள் வரிசையில், தற்போது வட-கிழக்கு நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ், நியாப் உதவியுடன் அத்தாயிலுள்ள ஒந்திராய்க்குளம் புனரமைப்புச் செய்யப்படவுள்ளது.

இதனால், இந்தப் பகுதி மக்களின் விவசாயத் தேவைகளைப் பெரிதும் பூர்த்தி செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது. (14)

# சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்க முடிவு!

## வட - கிழக்கு மனித உரிமை செயலகத்தில் தீர்மானம்



பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு, சிறைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்களை விடுவிப்பதற்கு ஏற்ற நடவடிக்கைகள் எடுப்பதென்று நேற்றுமுன்தினம் கிளிநொச்சியில் நடைபெற்ற வட - கிழக்கு மனித உரிமைகள் செயலகத்தின் மாதாந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

வட-கிழக்கு மாகாண மனித உரிமைகள் செயலகத்தின் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் காலை 10 மணிக்கு இந்தக் கூட்டம் இடம்பெற்றது.

வட - கிழக்கு மனித உரிமைகள் செயலகப் பணிப்பாளர் வண. மரியாம்பிள்ளை சேவியர், கருணாரட்ணம் தலைமையில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் - பிரான்ஸ் தமிழ் உரிமைமையத்தைச் சேர்ந்த திருதிருமதி கிருபா, விடுதலைப் புலிகளின் சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவன், சட்டத்தரணி சிவபாலன், நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரன், ஜோசப் பரராஜசிங்கம், யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர் செல்வி அருளானந்தம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரநேரு, தமிழீழ சட்டக்கல்லூரியைச் சேர்ந்த அர்ச்சுனன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்தச் சந்திப்பின்போது பல்கலைக்கழக அனுமதி மறுக்கப்பட்ட இரு மாணவர்களது பிரச்சினை, பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் விடுதலை, தமிழ்மொழிப் பாடசாலைகளில் உள்ள ஆங்கில ஆசிரியர் பற்றாக்குறை, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் ராதிகா குமாரசாமி - பின்தங்கிய கிராமத்தில் உள்ள ஒருவருக்கு பதிலளிக்க வேண்டிய அவலம் போன்ற விடயங்கள் தொடர்பாக தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

அத்துடன், மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பணிப்புரைக்கு அமைவாகச் செயற்படும் தமிழீழ காவல்துறை மற்றும் தமிழீழ நீதி நிர்வாகத்துறை என்பவற்றுக்குப் பாராட்டுக்களும் வழங்கப்பட்டன.

## நெறியாளர் குழு தெரிவு

மானிப்பாய் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தில் கடந்த வாரம் இடம்பெற்ற பொதுக் கூட்டத்தில் புதிய நெறியாளர் குழு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர் த.சிவலிங்கம், உப தலைவர் அ.சரவணபவன், செயலாளர் குணசீலனுடன் க.மகிந்தன், வே.இராசையா, ப.குமாரவேலு, ந.தேவராசா, ஐ.மனோகரன் ஆகியோர்களுடன் மகளிர் குழு உறுப்பினரான திருமதி ந.கேமலதா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

நடப்பாண்டிற்கான நெறியாளர் குழு முன்னாள் தலைவர் சிவலிங்கம் தலைமையில் இடம்பெற்றதாக சங்கப் பொதுமுகாமையாளர் சற்குணலிங்கம் தெரிவித்தார். (91)

## ஐந்து பாடசாலைகளில் கணினி பயிற்சிநிலையம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டிலுள்ள ஐந்து கணிணிப் பயிற்சி நிலையங்கள் நிறுவ - கல்வி கலாசாரம் மற்றும் மனித வள மேம்பாட்டு அமைச்சு முன்வந் துள்ளது.

இரண்டாம் நிலைக் கல்வித் திட்டத்தின் கீழ் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன் இந்தக் கணினிப் பயிற்சி நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.

## சமுத்திரதீபம் அம்புலன்ஸ் படகு அன்றையதினமே பழுதடைந்துவிட்டது

யாழ்ப்பாணம் தீவகத்துக்காக யு.என்.எச்.சி.ஆர் யாழ். பிரதி மாகாண சுகாதார சேவை பணிப்பாளரால், கடந்த வெள்ளியன்று கையளிக்கப்பட்ட சமுத்திரதீபம் அம்புலன்ஸ் படகு அன்றைய தினமே பழுதடைந்து விட்டது.

படகு, ஊர்காவற்துறையிலிருந்து நயினாதீவு - குறிகாட்டுவான் சென்று மீள ஊர்காவற்துறைக்கு திரும்பியது.

அரைவாசித் தூரத்திலேயே படகின் புறட்லர் ஒழுங்காச் சுற்றவில்லை எனவும், சிரமத்தின் மத்தியிலேயே ஊர்காவற்துறை திரும்பியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இயந்திரத்தின் கியர் அல்லது வேறு ஏதோ சிறுபிரச்சினை இதற்கு காரணமாகும் என கூறப்படுகின்றது.

ஏற்கனவே கடந்த ஆண்டு கையளிக்கப்பட்ட படகினுள் கடல்நீர் உட்புகுந்து இயந்திரம் பழுதடைநது, தற்போது திருத்திக் கையளிக்கப்பட்ட படகு - இயந்திரக் கோளாறுடன் ஊர்காவற்துறை இறங்குதுறையில் கட்டி வைக்கப்பட்டுள்ளது.

குறிகாட்டுவானில் படகைக் கட்டவும் கடற்படை அனுமதி வழங்கவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## கட்டாக்காலி நாய்கள் அழிப்பு

நல்லூர்ப் பிரதேச சபையினால் கடடாக்காலி நாய்கள் அழிக்கப்பட்டுள்ளன.

இவை திருநெல்வேலிப் பகுதி, பலாலி வீதி, ஆடியபாதம் வீதி, பிளளையார் வீதி, அம்மன் வீதி போன்ற இடங்களில் பிடிக்கப்பட்டவையாகும்.

இதுவரை காலமும் கட்டாக்காலி நாய்கள் தொடர்பாக பொதுமக்கள் செய்த முறைப்பாட்டை அடுத்தே, நலலூர்ப் பிரதேசசபை இந்த நடவடிக்கையில் தீவிரமாக ஈடுபட்டிருந்தது.

இதனால், 20 நாய்கள் இதுவரை நஞ்சூட்டி அழிக்கப்பட்டுள்ளன.

## பண்ணை வீதியை திருத்துமாறு கோரிக்கை

(மானிப்பாய்)

தீவுப்பகுதி போக்குவரத்துக்கான ஒரே வீதி எனக்கருதப்படும் பண்ணை வீதி - நீண்ட வருடங்களாகத் திருத்தபபடவில்லையென விசனம் தெரிவிக்கப்படுகிறது.

இந்த வீதியினால் நாளாந்தம் பயணம் செய்யும் அரச ஊழியரகள், பயணிகள், வியாபாரிகள் நாளாந்தம் பெரும் சிரமத்தை அனுபவித்து வருகின்றனர்.

அதுமட்டுமல்லாமல், இந்த வீதி திருத்தம் செய்யாது குன்றும், குழியுமாகக் காணப்படுவதால், வாகனங்களுக்கும் சேதம் விளைவித்து நஷ்டத்தையும் ஏற்படுத்துவதாகவும் குறை கூறப்படுகிறது. (100)

## பானாவெட்டிக் குளத்தில் வெடிபொருள் அபாயம்

அளவெட்டி பானாவெட்டிக் குளத்தில் கண்னிவெடி அபாயம் இருப்பதாக விவசாய சம்மோளன சண்டிலிப்பாய் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குளம் மிக நீண்ட காலமாக புனரமைக்கப்படாமையால் வாய்க்கால் தூர்ந்து போயுள்ளதுடன் பாரிய களைகளும் வளர்ந்துள்ளன.

இதனால் இந்தப் பகுதி விவசாயிகள் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர்.

உரிய அமைப்புக்கள் கண்ணிவெடிகளை அகற்றிகுளப் புனரமைப்புக்கான வசதிகளை ஏற்படுத்திக் கொள்வதன் மூலம் வெள்ள அழிவுகளிலிருந்து பயிர் அழிவடைவதை தடுப்பதன் மூலம் விவசாய செயற்பாடுகளையும் விருத்தி செய்யலாம் என சம்மோளன பிரதிநிதி தெரிவித்தார். (91)

## எழுச்சிப் பேரவையின் சங்கமம் நிகழ்வு

(நெடுந்தீவு)

நெடுந்தீவு பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையின் பேராளர் சங்கமும், எழுச்சிப் பேரவை செயலக திறப்பு விழாவும் இன்று காலை 10 மணிக்கு நெடுந்தீவு மத்தியில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபன் மருத்துவமனை வளாகத்தில் இடம் பெறவுள்ளது.

இந்த நிகழ்வு நெடுந்தீவு தேசிய எழுச்சிப் பேரவையின் பேராளர் சு.கணேசலிங்கம் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்த நிகழ்வில் பொதுச் சுடரேற்றல், தேசியக் கொடியேற்றல், மாவீரரின் திருவுருவப் படங்களுக்கு நினைவுச் சுடரேற்றல், மற்றும் சிறப்புரை கருத்துப் பகிர்வு என்பனவும் இடம் பெறவுள்ளது. (113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம்.

திருக்குறள்

# நமது நோக்கு

## கை விரிக்கும் உலக வங்கி; கை நழுவும் சமாதானம்

சமாதான முயற்சிகளை முன்னெடுப்பது தொடர்பான விடயங்களில் அரசாங்கம் காட்டிவரும் அக்கறையற்ற தன்மை காரணமாக சர்வதேச சமூகம் மிகவும் வெறுப்பும், கோபமும் அடைந்துள்ளதாகத் தெரிகிறது. இலங்கையில் அமைதி நிலையை உறுதி செய்து, பல்லாண்டுகால இனப்பிரச்சினைக்கு ஓர் அரசியல் ரீதியிலான - உறுதியான - தீர்வை சமாதானப் பேச்சுவார்த்தைகள் மூலம் ஏற்படுத்தக் கடுமையாக முயற்சித்து வரும் நோர்வே அரசின் விசுவாசமான உழைப்பையே சந்தேகித்தும், கடுமையாக விமர்சித்தும், கண்டித்தும் வரும் இலங்கை அரசின் நடவடிக்கைகள் யாவும், சமாதான முயற்சிகள் மீதான அவர்களின் விசுவாசத்தை முழுமையாகச் சந்தேகிக்கவே வைத்துள்ளன என்றே கூறவேண்டும்.

ஒருமித்த கொள்கைப்பிடிப்புடன்கூடிய அரசியல் செயற்பாட்டுத்திட்டமோ அல்லது தேசிய நலன்கள் மீதான வெறுப்புடன் கூடிய அக்கறையோ, மனித உரிமைகளை மதித்துப் போற்றும் ஜனநாயகப் பண்புகளோ அற்ற இனவாதக் கோட்பாடுகளை வெறித்தனமாகக் கடைப்பிடித்துவரும் கட்சிகளின் கூட்டணியான ஐக்கியமக்கள் சுதந்திர முன்னணியின் சமாதானம் தொடர்பான கருத்தியல் நிலைப்பாடு எவ்வாறானது என்பதை விளக்கிக் கூறவேண்டிய அவசியமேயில்லை.

கடந்த பொதுத்தேர்தலுக்கு முன்பிருந்தே - அதாவது முன்னைய ஐக்கிய தேசிய முன்னணி அரசு பதவியைப் பொறுப்பேற்று நோர்வேயின் அனுசரணையுடன் சமாதான நகர்வுகளை முன்னெடுக்கத் தொடங்கிய காலத்திலிருந்தே- சிறிலங்கா சுதந்திரக்கட்சி, ஜே.வி.பி, மக்கள் ஐக்கிய முன்னணி என இன்றைய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் அங்கம் வகிக்கும் கட்சிகள் அனைத்துமே தனித்தனியாகவும், ஒன்றுசேர்ந்தும் சமாதான முயற்சிகளை மூர்க்கத்தனமாக எதிர்த்தவைகளேயாகும்.

இன்று சமாதானத்தை முன்னெடுக்க விரும்புவதாக அறிக்கை விட்டுக்கொண்டே இருக்கும் ஜனாதிபதியும் இந்த சமாதான எதிர்ப்பு நடவடிக்கைகளில் இருந்து தன்னை விலக்கிக்கொண்ட ஒருவரல்ல ... இன்னும் தெளிவாகக் கூறுவதானால் அவரே இந்த சமாதான எதிர்ப்பணியின் மறைமுகத் தலைவியாகவும் செயற்பட்டார் என்றே சொல்லவேண்டும்.

அவரே நோர்வேயின் விசேட தூதுவரான எரிக் சொல்ஹெய்ம் விடுதலைப் புலிகளுக்கு சார்பாகச் செயற்படுகிறார் என்று வெளிப்படையாகக் குற்றம்சுமத்தி அவரை சமாதான முயற்சிகளில் இருந்து அகற்றிவிடுமாறு நோர்வே அரசிடம் கோரியவருமாவார்.

இந்த நிலையில் இதே கட்சிகளின் - சமாதான எதிர்ப்பு இனவாதக் கோட்பாட்டாளர்களின் கூட்டணி அமைந்துள்ள ஒரு ஆட்சியில், சமாதான முன்னெடுப்புகளை அந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் வெற்றிகரமாகவும், இலட்சிய நோக்குடனும் முன்னெடுப்பார்கள் என எவராலும் நம்பமுடியுமா?

இருப்பினும் சர்வதேச சமூகமும் - நோர்வே அரசும் - இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளும் ஏனைய அமைப்புக்களும் கடந்த மூன்று மாதமாக அரசுடன் சமாதான முயற்சிகள் தொடர்பாக மேற்கொண்ட ஆலோசனைகள் மற்றும் அரசுக்கு விடுத்த அறிவுறுத்தல்கள் அனைத்துக்கும் அரசு தீர்க்கமான எந்தவொரு பதிலையும் இன்றுவரை உறுதியாகத் தெரிவிக்காத நிலையில் நாளுக்கு நாள் - அரசைச் சேர்ந்த முக்கியஸ்தர்கள் ஒவ்வொருவரும் ஆளுக்கு ஆள் வெளியிட்டு வரும் முன்னுக்குப் பின் முரணான கருத்துக்களை முன்வைப்பதன் மூலம் தமது சமாதான நகர்வுகள் குறித்த தெளிவான கொள்கையற்ற - இன்னும் கொஞ்சம் ஆழமாக நோக்கின் அதற்கு எதிரானதும் யுத்தம் ஒன்றை மீண்டும் தொடங்கத் தூண்டும் நோக்கிலானதுமான நிலைப்பாட்டை பகிரங்கமாக்கி விட்டுள்ளனர் என்றே கூறவேண்டும்.

உண்மையில் சமாதான முயற்சிகளில் அக்கறை கொள்ளாது இருக்கும் இலங்கை தனக்கு கிடைக்கக்கூடியதும், அதற்கு மிகவும் அவசியத் தேவையானதும், உலக சமூகத்தால் உறுதியளிக்கப்பட்டதுமான பெருமளவு கடன் மற்றும் நிதியுதவிகளை முற்றாக இழக்கும் அபாயம் இப்போது தோன்றியுள்ளது.

உலக வங்கியால் இலங்கைக்கு வழங்கவென ஒதுக்கீடு செய்யப்பட்ட பெருந்தொகையிலான நிதியுதவியை மீளப் பெறப்போவதாக அந்த வங்கி அறிவித்துள்ளமையானது, அரசுக்கு ஒரு பேரிடியாகவே அமைந்துள்ளது. அரசு சமாதான முயற்சிகளில் ஆர்வமோ அக்கறையோ காட்டுவதாகத் தெரியவில்லை எனக் கவலை தெரிவித்துள்ள உலக வங்கி - இரு மாதங்களின் முன் அரசு முன்வைத்த பொருளாதார முகாமைத்துவம் குறித்த திட்ட வரைபானது சர்வதேச நிதிக் கண்காணிப்பாளர்களின் அங்கீகாரத்தைப் பெற முடியாத அளவுக்குத் தகுதியற்றதொன்றாக இருக்கிறது என குற்றஞ்சாட்டியுள்ளதுடன், இதன் காரணமாக இலங்கைக்கு வழங்குவதாக உறுதியளித்திருந்த 282 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியை மீளப் பெறப்போவதாகவும் அறிவித்துள்ளது.

இலங்கையில் பொருளாதாரம் அதள பாதாளத்தை நோக்கிச் சரிந்து வீழ்ந்து கொண்டிருக்கும் நிலையில் உலக வங்கியின் இந்த முடிவு அதற்கு நிமிர முடியாத நிலையினை உருவாக்கப் போகின்றது.

நிதியைப் பெற சமாதானத்தை நீதியான முறையில் முன்னெடுக்க வேண்டும். ஆனால், அதற்கு அரசு தயார் நிலையில் தற்போது இருப்பதாகத் தெரியவில்லை.

இந்த நிலையில் வெளிநாடு சென்றுள்ள ஜனாதிபதி 'நல்ல காலம்' பார்த்து நாடு திரும்பும்போது பல்வேறு நெருக்கடிகளுக்கு முகம்கொடுக்க வேண்டியவராக இருக்கப் போவது மட்டும் மிகமிக உண்மையாகும்.

# நாடும் நடப்பும்




# வில்பத்துப் பகுதியில் புலிகளால் இரு புதிய முகாம்கள் அமைப்பு!

## பொலிஸ் புலனாய்வுப் பிரிவு தகவல்

(கொழும்பு)

வில்பத்து பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகள் புதிய இரண்டு முகாம்களை அமைத்துள்ளதாக, பொலிஸ் புலனாய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது.

புத்தளம் மற்றும் மன்னார் பிரதேசங்களில் எல்லைகளைக் கொண்ட இடங்களில் இந்த முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளதாகவும், இந்த முகாம்களுக்கும் மன்னார் கடற்பகுதியில் அமைந்துள்ள விடுதலைப் புலிகளின் குதிரை மலை முகாம்களுக்கும் இடையில் தொடர்புகள் இருப்பதாக பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

வில்பத்து பகுதியில் அமைக்கப்பட்டுள்ள புதிய முகாம்களில் பெருமளவு பெண் போராளிகள் பயிற்சி பெறுவதாக தமக்குத் தகவல் கிடைத்துள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

இந்த நிலையில் வன பரிபாலன சபையினரின் தகவல்களின் படி - வில்பத்து முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளமை உண்மையான விடயமாக இருக்கின்ற போதும், அது சுற்றுலாத் துறையினர் செல்லும் இடங்களில் அமைக்கப்பட்டிருக்கவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இலங்கைக்கான அபிவிருத்தி நிதி மீளத் திரும்பும் அபாயம் ஏற்பட்டுள்ளது

அரசின் சமாதான நடவடிக்கைகள் தொடர்பான அசமந்தப் போக்கினால் இலங்கையின் அபிவிருத்திக்கென வழங்கப்படவிருந்த உலக வங்கியின் நிதி மீளப் பெறப்படவுள்ளது.

இதற்கான அறிவிப்பை, சர்வதேச நிதி கண்காணிப்பின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி ஜெர்மி கார்ட்டர் விடுத்துள்ளார்.

கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் சிறிலங்கா அரசினால் வழங்கப்பட்ட பொருளாதார முகாமைத்துவக் கொள்கை மிக மோசமாகக் காணப்படுவதாகவும், இந்த நிலையில் சமாதான நடவடிக்கைகள் தொடர்ந்தும் அரசினால் இழுத்தடிக்கப்படுவதால், ஒதுக்கப்பட்ட நிதி மீளப் பெறப்படுவதுடன், தொடர்ந்தும் உதவிகளும் இடைநிறுத்தப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளதாக கூறப்படுகின்றது.

உலக வங்கி, இலங்கை அரசாங்கத்துக்கு வழங்குவதற்கு உறுதியளித்த 282 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி உதவியை மீளப் பெறத் தீர்மானித்துள்ளதாகவும் கார்ட்டர் தெரிவித்தார்.

## இந்திய தொழிற்துறைக் குழுவொன்று செப்ரெம்பரில் இலங்கைக்கு வரவுள்ளது

இந்தியக் கைத்தொழில் துறைக்குழு ஒன்று செம்ரெம்பர் முதல் வாரத்தில் கொழும்புக்கு வரவுள்ளது. இந்தக்குழு இங்கு முதலீடுகளை மேற்கொள்வது குறித்து ஆராயவுள்ளது.

ஏற்கனவே, கடந்த மே மாத்தில் இந்தியா சென்றிருந்த இலங்கையின் முதலீட்டுக் குழு ஒன்று, இந்திய முதலீட்டாளர்களைச் சந்தித்திருந்தது.

இதன்போது இந்திய நாட்டின் முதலீட்டாளர்கள், இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்ள வேண்டும் என, அவர்களால் விடுத்த வேண்டுகோளின் அடிப்படையிலேயே இந்த முனைப்பை இந்திய முதலீட்டாளர்கள் எடுத்துள்ளனர்.

பெரும்பாலும் கைத்தொழில் உபகரண வகைகள், விவசாய உற்பத்தியாளர்கள் மற்றும் சமையலறை உற்பத்தியாளர்களே தமது முதலீடுகளை மேற்கொள்ளவுள்ளனர்.

## புலிகளுக்கு விசேட பயிற்சி

## நோர்வே உளவுப் பிரிவில் முறைப்பாடு செய்திக்கு புளொட் அமைப்பினர் மறுப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலி உறுப்பினர்கள் 21 பேருக்கு நோர்வேயின் விசேட இராணுவப் படையணியின பயிற்சியைப் பெறுவதற்கு எரிக் சொல்ஹெய்ம் உதவியதாக, புளொட் அமைப்பின் பிரதிநிதி ராஜன் என்பவரால், நோர்வே பாதுகாப்பு உளவுப் பிரிவினரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக வெளியான செய்திக்கு புளொட் அமைப்பினர் மறுப்புத் தெரி வித்துள்ளனர்.

இது தொடர்பாக அவர்கள் அனுப்பிவைத்துள்ள செய்திக் குறிப்பில் -

எமது அமைப்பைப் பொறுத்தளவில் அரசுக்கும் - புலிகளுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு - எமது சொல்லாலோ, செயலாலோ இடையூறு ஏற்படுத்தமாட்டோம் என்று ஏற்கனவே பல்முறை எமது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தியுள்ளோம். இதை நாம் நடைமுறையிலும் கடைப்பிடித்து வருகிறோம் என்பதைத் தெளிவுபடுத்துகிறோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வாழ்க்கைச் செலவு அதிகரிப்பை குறைக்காவிடில் போராட்டம்

### ஜே.வி.பி எச்சரிக்கை

(கொழும்பு)

அதிகரித்துவரும் வாழ்க்கைச் செலவைக் குறைக்கும் திட்டத்தை, அரசாங்கம் உரியமுறையில் அமுல்படுத்தாவிட்டால் போராட்டங்களை நடத்தப் போவதாக அரசாங்கத்தின் பங்காளிக்கட்சியான ஜே.வி.பி. எச்சரித்துள்ளது.

இது தொடர்பாக அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் ஜே.வி.பி. கட்சியின் அமைச்சரும் அந்தக் கட்சியின் தொழிற்சங்க இணைப்பாளருமான லால் காந்த தெரிவித்துள்ளதாவது-

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் தொழிலாளர்களுக்கு சார்பான அரசாங்கமல்ல. ஆனால், தற்போதைய இந்த அரசாங்கத்தைத் தொழிலாளர் வர்க்கமே ஆட்சியில் அமர்த்தியுள்ளது.

எனவே, அரசாங்கம் தொழிலாளர் நலனுக்காக எந்தவித செயற்பாட்டையும் மேற்கொள்ளாவிட்டால், விரைவில் தொழிலாளர் வீதியில் இறங்கிப் போராடுவர் எனவும் அவர் தெரிவித்தார். (01)

## கொடிகாமம் மருத்துவமனைக்கு ஆளணியினரை நியமிக்கவும்

கொடிகாமம் வைத்தியசாலை தரமுயர்த்தப்பட்டதால் இந்த மருத்துவமனைக்கு மாவட்ட வைத்தியசாலைக்குரிய வைத்தியர்கள், தாதிமார்கள், மருந்தாளர்கள் ஆகியோரை உடனடியாக நியமிக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் இந்தப் பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த மருத்துவமனையின் அபிவிருத்தி சம்பந்தமாக சுகாதாரத் திணைக்களம் நடவடிக்கை எடுக்கவேண்டுமெனவும் இந்தப் பிரதேச மக்கள் கோரியுள்ளனர்.

தற்போது அவசரதேவைகளுக்காக சாவகச்சேரி வைத்தியசாலைக்குச் செல்லவேண்டியுள்ளதால், இந்த வைத்தியசாலை சீரான முறையில் இயங்கினால் மக்கள் இலகுவாகப் பயனடைவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. (17)

## மணல் அகழும் இடங்களைப் பரிசோதிக்க கொழும்பிலிருந்து பகுப்பாய்வுக் குழு!

யாழ். மாவட்டத்தில் மணல் அகழ்வு செய்யப்படும் இடங்களைப் பரிசோதிப்பதற்காக கொழும்பிலிருந்து பகுப்பாய்வுக் குழுவொன்று எதிர்வரும் 10 ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ். மாவட்டத்தின் கரையோரப் பிரதேசங்களில் இடம்பெறும் மண் அகழ்வினால் ஏற்படக்கூடிய பாதிப்புக்கள் குறித்தும், மண் அகழ்வு நடைபெறும் இடங்கள் பாதுகாப்பானவையா என்பது குறித்து ஆராயவுமே இவர்கள் இங்கு வருகைதரவுள்ளனர்.

அத்துடன், மணற்காடு மற்றும் வடமராட்சியின் மண் அகழப்படும் இடங்களுக்கு நேரில் சென்று இவர்கள் ஆய்வுகளை நடத்தவுள்ளார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ப)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல்நோக்கு... - கே.ரீ.கணேசலிங்கம்

# 'கொலின்பவல்' எதிர் 'ஏதென்ஸ்' கிரேக்கத்தின் முன்மாதிரி அரசியல்

'ஏதென்ஸ்' என்ற சொல்லை கடந்தகாலங்களில் நினைவில் கொள்ளாத மனிதர்களே இல்லை என்று சொல்லலாம். சிறுவர், முதியவர், இளைஞர், யுவதிகள், ஆண்கள், பெண்கள் என்ற வேறுபாடின்றி எல்லோருமே அறிந்த சொல்லாக மாறிவிட்டது. ஒலிம்பிக்கின் பிறப்பிடத்தில் ஏதென்ஸ்' ஒலிம்பிக் நடந்தது என்பதைவிட ஒலிம்பிக் விளையாட்டின் தனித்தன்மையும் காரணமாகும். இந்த ஒலிம்பிக்கால் தான் கிரேக்கம் பிரபலமானதென்றோ, ஏதென்ஸ் இடம்பிடித்ததொன்றோ அல்ல. உலக வரலாற்றின் அரசியல்,. கணிதம், விஞ்ஞானம், பூமிசாஸ்திரம், சோதிடம் எனப் பலவற்றின் தோற்றத்தை கிறிஸ்து பிறப்புக்கு முந்திய காலத்திலேயே கண்டறிந்த சிந்தனையாளர்களைக் கொண்டது கிரேக்கம்.

கிரேக்கத்தின் சிந்தனையாளர்களில் உலகம் என்றுமே மறக்கப்பட முடியாதவர்கள் அதிகமுண்டு. அதிலும் சோக்கிரட்டீஸ் என்றென்றும் மறக்கப்பட முடியாதவர். உலகம் இருக்கும்வரை சோக்கிரட்டீஸ் உயிர் வாழ்வார். சோக்கிரட்டீஸ் போன்று உலகத்தில் அறிவியலை மதித்த எந்த அறிஞனையும் இலகுவில் காண்பது அரிதானதே. தன்னைப் புதைத்து அல்லது அழித்து தனது சிந்தனைகளை வாழவைத்த உயரிய சிந்தனையாளன் சோக்கிரட்டீஸ். அவரது மாணாக்கரும் அதன் பரம்பரையும் என்றுமே உலகம் மறக்கமுடியாத சிந்தனையைப் பரப்பியதுடன் கிரேக்கத்தை உலகத்தின் அறிவியலின் கண்களாக்கிவிட்டு சென்றுள்ளதை மறக்கவே முடியாது. அப்படியான கிரேக்கத்தில் நடந்த ஒலிம்பிக் போட்டியில் அதிக வெற்றிகளைப் பெற்ற உலக அரசியலின் ஆதிக்கத்தை திணித்து வரும் கனவான்களுக்கு நல்ல பதிலடியை அந்த மக்கள் கொடுத்துள்ளனர். அமெரிக்க வெளிவிவகார செயலாளர் கொலின்பவலின் கிரேக்க விஜயம் இடைநடுவில் ரத்துச் செய்யப்பட்டதையும் - இதனால் அமெரிக்கருக்கு ஏற்பட்ட அவமானத்தையும், கிரேக்க மக்களின் மனோநிலையையும் பரிசீலிப்போம்.

ஒலிம்பிக் போட்டியில் அதிக தங்கப் பதக்கங்களை மட்டுமன்றி அதிக பதக்கங்களைப் பெற்றுள்ள நாடு (தற்போது வரை) அமெரிக்காவாகும். உலக ஆதிக்க அரசியலில் இதுவுமொன்றென அமெரிக்கர்கள் கருதலாம். ஆனால், அமெரிக்க வெள்ளையரைவிட அமெரிக்க கறுப்பர்களின் துடிப்பும், வேகமுமே அமெரிக்கர்களின் பதக்கப்பட்டியலில் முதலிடம் பெறக்காரணம். அதற்கு அமெ



ரிக்க ஆதிக்க ஆட்சியாளர்கள் கறுப்பர்களுக்கே முதலில் நன்றி சொல்லவேண்டும். அதைவிடுத்து, விளையாட்டை அரசியலாக்கும் பாணியில் இறுதி நிகழ்வில் கலந்து கொள்வதற்கு கொலின்பவல் தயாரானபோது கிரேக்க மக்கள் அமெரிக்க ஆட்சியாளரையும், கொலின் பவலின் வருகையையும் கண்டித்து அமெரிக்க தூதரகம் முன்பு ஆர்ப்பாட்டம் செய்ததுடன் ஒலிம்பிக் அலங்காரங்களையும், ஏதென்ஸ் நகரத்தையும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கினர். இதனை கண்டுகொண்ட அமெரிக்க ஆளும் நிர்வாகம் கொலின் பவலை ஏதென்ஸ"க்கு அனுப்புவதை உடனடியாக கைவிட்டதாக அறிவித்ததுடன், கொலின்பவலுக்கு வேலைப்பளு அதிகமாக இருப்பதால் கலந்து கொள்ளமுடியாமல் போய்விட்டதாக ஒரு எஜமான் அரசியல் தனத்தில் பதிலளித்தது.

கிரேக்க மக்களின் எதிர்ப்புக்கான அடிப்படை காரணங்களில் பிரதானமானவை ஈராக், ஆப்கானிஸ்தான் மீதான தான்தோன்றித்தனமான இராணுவ நடவடிக்கை என்றும் உலகத்தை அமெரிக்க இராணுவத்தின் ஆதிக்கு கத்துக்குள்ளே அடக்க முயலும் ஆட்சியாளருக்கும் எதிரானதாகவே ஆர்ப்பாட்டக்காரர்கள் கோஷம் எழுப்பும் போராட்டத்தை நடத்தினர். இதனைக கண்ட அமெரிக்க ஆட்சியாளர்கள் அதிர்ந்து போனார்கள். கனவான் விளையாட்டு அரசியலை நடத்திக் காட்ட முடியாத நிலை ஒருபுறமும் மறுபக்கத்தில் உலகின் முதல்தர அரசுக்கு இவ்வளவு பாதகமான சூழல காணப்படுவதென்பதும் அமெரிக்கா உலகத்தை அவமானமாக்கும். அமெரிக்கா உலகத்தை ஆட்டிப் படைத்தாலும், ஒலிம்பிக்கில் தான் நினைத்ததை சாத்தியப்படுத்த முடியவில்லை என்பதே அதன் அரசியல் வங்குரோத்துத்தனத்தை காட்டுகிறது. உலகத்தில் அமெரிக்க ஆதிக்கம் தடுமாறும் ஒரு விடயமாகவே இதனை விளங்கிக் கொள்ளுதல் வேண்டும். மேலும் ஆர்ப்பாட்டக்காரர்கள் பலஸ்தீன விடுதலைப் போராட்டத்துக்கெதிராக அமெரிக்கா பின்பற்றிவரும் அணுகுமுறையையும் கண்டித்துள்ளன. இதனால் அமெரிக்காவின் உலகளாவிய இராணுவப் பொருளாதார அரசியல் கொள்கைகள் சாதாரண கிரேக்க மக்களால் விமர்சிக்கப்பட்டுள்ளது. இது கிரேக்கத்தில் ஏற்பட்டதென்பதைவிட, ஒலிம்பிக்போட்டியின் போது ஏற்பட்டதென்பதே அதன் முக்கியத்துவம் உணரப படுகின்றது.

கிரேக்கம் முன்னாள் சிந்தனையாளர்களை இன்றுமே மரிக்கவில்லை என்பது மட்டுமல்ல, அவர்களது சிந்தனையை மதிக்கும் மக்களாகவும் உள்ளனர். உலகத்தில் மக்கள் திருப்தியடையாத ஒரே ஒரு அரசும், ஆட்சியும் முன்னாள் கிரேக்கம் என்பதை மறந்து விடமுடியாது. ஆனால், கிரேக்கம் ஒரு சோசலிஸ தத்துவத்தையோ, தாராலி ஜனநாயக அரசியலையோ அப்போது கொண்டிருக்காத அரசாக விளங்கியது. ஆனால் ஆட்சியின் நேரடி ஜனநாயகம் காணப்பட்டதாலும், அதன் பொருளாதாரத்தில் தாராள தன்மை இருந்ததாலும் அதனை நவீன தாராள ஜனநாயகத்துக்கு நவீன அரசியல் அறிஞர்கள் ஒப்பிடுகின்றனர்.

ஆனால் அத்தகைய ஒப்பீடு எந்தளவுக்கு பொருத்தம் என்பது கேள்விக்குரியது. காரணம் அதேபோன்ற ஆட்சியோ, நிர்வாகமோ உலகத்தில் தற்போது வரை நிகழவில்லை.

அவ்வாறே இன்றுகூட கிரேக்கம் சோசலிஸ சித்தாந்தத்தைக் கொண்ட நாடுமல்ல. தாராள பொருளாதார பொறிமுறையைப் பின்பற்றாத நாடு மல்ல. அப்படியான சூழலில் கிரேக்க மக்கள் அமெரிக்காவை எதிர்த்துள்ளனர் என்பது அவர்களது அரசியல் பலத்தைக் காட்டுகின்றது. கிரேக்க மக்களின் பலம் உலகத்தின் அநேக மக்களுக்கு ஏற்படவேண்டும். கிரேக்க மக்களின் முன்மாதிரியைப் பின்பற்றி உலக மக்கள் கிளர்ந்தெழும் காலம் எப்போது சாத்தியப்படுகின்றதோ, அப்போதே உலகம் அமெரிக்க ஆதிக்கத்திலிருந்து விடுபடும். சிறிய மக்கள் கூட்டத்தின் பலத்தில் அமெரிக்க ஆதிக்க ஆட்சியினர் அதிர்ச்சியடைந்துள்ளனர். கொலின பவலின் விஜயத்தை ரத்துச்செய்து, விட்டு பின்னர் சாத்தியப்படுத்த முயன்றாலும் கிரேக்க மக்களுக்கு பாரிய வெற்றியாகவே அந்த விடயம் காணப்படுகின்றது.

போராட்டமும் அதன் உணர்வும் இயல்பாகவே மக்களின் விழிப்புணர்வால் வளரவேண்டும். அமெரிக்க ஆட்சியைமட்டுமே கிரேக்க மக்கள் வெறுக்கின்றனர் என்பது அவர்களது அணுகுமுறையிலிருந்து புரிந்து கொள்ளமுடியும். அமெரிக்க விளையாட்டு வீரரையோ அல்லது அமெரிக்க மக்களையோ கிரேக்க மக்கள் எதிர்க்கவில்லை. இது அமெரிக்காவின் ஆதிக்க அரசியலுக்கு எதிரான உணர்வைக் காட்டுவதாகவே அமைந்திருக்கின்றது. இதுவே அரசியல் விழிப்புணர்வான நடத்தையாகும். அரசியலில் பிரஜைகளின் நடத்தையை அளவீடு செய்வதற்கு ஏற்றவகையில் பிரஜைகளின் விழிப்புணர்வும், அதன் வெளிப்படுகையும் காணப்படுதல் வேண்டும். கிரேக்க மக்கள் நாகரிகமான அரசியல் நடத்தையைக் காட்டியுள்ளனர். எதிரியை எதிர்க்கும் முறைமையைக் கற்றுள்ளனர் கிரேக்கர் என்பதுடன் காலத்தையும், இடத்தையும் தெளிவாக இனங்கண்டு வெளிப்படுத்தியுள்ளனர்.

வீதியில் ஆயிரக்கணக்கான மக்கள் இறங்கி ஆர்ப்பாட்டம் செய்வதெல்லாம் போராட்டமாக அமைந்து விடாது தெளிவான இலக்கு அதனை அடைவதற்கான வழிமுறை என்பதோடு, உரியகாலத்தைக் கவனித்தல் வேண்டும். கிரேக்கம் ஈராக்குக்குப் படையை அனுப்பியதோ, இல்லையோ அதற்கு ஆதரவளித்ததோ, இல்லையோ வேறுவிடயம். ஆனால், அமெரிக்கரை அவமானப்படுத்தும் பெரும் அரசியலை கிரேக்கர் காட்டியுள்ளனர்.

சில அறிஞர்கள் கருதலாம் ஒலிம்பிக்கை நடாத்திய மக்களா இப்படிச் செய்தார்கள் என்று? ஆனால், அது பொருத்தமான வாதமல்ல. அந்த மக்கள் ஒலிம்பிக் மேடையில் வைத்து கொலின்பவலை அவமதிக்கவில்லை. அடுத்து வேறு எதறகாகவும் கிரேக்கத்துக்கு கொலின் பவல் விஜயம் செய்யமாட்டார். எல்லாவற்றையும் விட ஒலிம்பிக் போட்டியைக் கடந்து ஒரு அரசியலை நேசிக்கும் மக்கள் கூட்டமாக அந்த மக்கள் உள்ளனர் என்பதே அவர்களின் சிறப்பாகும். உலகத்தில் ஒரு தங்கத்துக்காக வாயைப் பிளக்கும் நாடுகளும், மக்கள் கூட்டமும், ஆட்சியாளரும் இருக்கும்போது கிரேக்கம் தனது சிந்தனையாளர் களைப் பின்பற்றிக் கருத்தை வெளிப படுத்தியது அதன் சிறப்பை மேலும் மெருகூட்டுகின்றதென்றே கூறலாம்.

எனவே கிரேக்கத்தின் முன்மாதிரி ஒலிம்பிக்கிலும் பிரகாசித் துள்ளது. அது பெற்ற பதக்கத்தைவிட, அந்த மக்கள் நடத்திய அரசியல் எதிர்வாதப் போராட்டமே அந்தக் கௌரவத்தை அவர்களுக்கு ஏற்படுத்தியுள்ளது. கிரேக்கத்தைப் பின்பற்றும் உலகம் அமெரிக்க ஆட்சியாளரை உதாசீனப்படுத்தும் அரசியலில் ஈடுபடவேண்டும். மக்களின் விழிப்புடைய அரசியலுக்கு முன்னால் எந்த ஆதிக்க அரசியலும் அடங்கிப்போகும்.

தமிழக அரசியல்... - நக்கீரன் - கனடா

# வை.கோ.வின் அரசியல் வாழ்வில் திருப்புமுனை ஏற்படுமா...?



மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் செயலர் வைகோ தனது தலைக்கு மேல் தொங்கிக் கொண்டிருந்த பொடா வாளில் இருந்து தப்பி இருக்கிறார்.

முற்றிலும் எதிர்பாராத விதமாக முதல்வர் ஜெயலலிதா அவர் மீது போடப்பட்ட பொடா வழக்கை திருப்பிப் பெறமுடிவு செய்துள்ளார். தமிழக அரசு சார்பாக அதனை அரச வழக்கறிஞர் பூந்தமல்லி பொடா சிறப்பு நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளார்.

பொடா மறு ஆய்வுக் குழுவின் முதன்மை நீதிபதி சக்காரியா 'வைகோ மீது தொடுத்த பொடா வழக்கில் பூர்வாங்க சான்று இல்லை. எனவே, தமிழக அரசு வழக்கை திரும்பப் பெறவேண்டும்" என்ற பரிந்துரையை அலட்சியம் செய்த ஜெயலலிதா இந்த திமிர் முடிவை எடுக்க என்ன காரணம்?

வைகோ மீது ஏற்பட்ட பச்சாத்தாபமா? அல்லது தனது பிழையை உணர்ந்த அதற்கு கழுவாய் தேடும் முயற்சியா?

இரண்டுமே இல்லை. வைகோ தன்னையும் தனது தோழர்களையும் விடுதலை செய்யுமாறு கேட்டு உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

ஏற்கனவே உச்ச நீதிமன்றத்தில் வைகோ தொடர்ந்த வழக்கில் "தடை செய்யப்பட்ட இயக்கத்தை ஆதரித்துப் பேசுவது குற்றம் ஆகிவிடாது" என உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கி இருக்கிறது.

இதன் பொருள் தமிழக முதல்வர் ஜெயலலிதா பொடா சட்டத்தை வைகோ மீது தவறாகப் பயன்படுத்தி இருக்கிறார் என்பதுதான்.

இது முதல்வர் ஜெயலலிதாவின் தலையில் உச்ச நீதிமன்றம் வைத்த குட்டு என்றே சொல்லலாம். எனவே, இன்னொருமுறை உச்ச நீதிமன்றம் தனது தலையில் குட்டுவதை ஜெயலலிதா விரும்பவில்லை. பொடா வழக்கை திரும்பப் பெறுவதென அவர் எடுத்த முடிவுக்குப் பின்னால் உள்ள ரகசியம் இதுதான்.

இன்னொரு காரணமும் இருக்கிறது. பொடா சட்டத்தை நீக்குவது என்று, மத்திய அமைச்சரவை முடிவு எடுத்து விட்டது. அதற்கான சட்டம் வரும் நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் கொண்டு வரப்பட இருக்கிறது. வீணாக ஏன் முகத்தில் கரி பூச வேண்டும் என்ற எண்ணத்தில் ஜெயலலிதா பொடா வழக்கை திருப்பிப் பெற்றுவிட்டார்.

இதேநேரம் பழ.நெடுமாறன், சுப வீரபாண்டியன், பாவாணன், நக்கீரன் கோபால் போன்றோர் மீதான பொடா வழக்குகள் திருப்பிப் பெறப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால், பொடா சட்டம் நீக்கப்பட்டால், இவர்கள் மீதான வழக்குகளை திருப்பிப் பெறுவதைத் தவிர வேறு வழி ஜெயலலிதாவுக்கு இருக்கமாட்டாது.

தன்மீது போடப்பட்ட வழக்கு திருப்பிப் பெற ஜெயலலிதா முடிவு செய்ததையிட்டு, வைகோ தனது கருத்தை மிகவும் காட்டமாகத் தெரிவித்திருக்கிறார்.

"இரண்டு ஆண்டுக்கு முன் எங்களை ஜெயலலிதா அரசு பொடா வழக்குப் போட்டு கைது, செய்து 19 மாதம் சிறையில் அடைத்தது. ஈழத் தமிழருக்காக போராடும் அமைப்புக்கு ஆதரவாகப் பேசியது குற்றம் ஆகாது என்று உச்சநீதிமன்றம் உச்சந் தலையில் அடித்துச் சொல்லியது. எங்கள் மீது பொடா வழக்குத் தொடர முகாந்திரமே இல்லை என்று பொடா மறு ஆய்வுக்குழுத் தலைவர் தீர்ப்புச் சொன்னார்.

அப்போதெல்லாம் எங்கள் மீது ஜெயலலிதா வழக்கைத் திருப்பிப் பெற மறுத்தார். மறு ஆய்வுக்குழு தலைவர் அளித்த தீர்ப்பை வேடிக்கை, கேலி, பரிகாசத்துக்குரியது என்று நீதிமன்றத்தில் வாதாடிய அதே ஜெயலலிதா அரசு வழக்குரைஞர் தான் இன்றைக்கு வழக்கைத் திருப்பிப் பெறுவதாக மனுக் கொடுத்து இருக்கிறார்.

ஜெயலலிதாவுக்கு திடீரென ஞானோதயம் ஏற்பட்டு விட்டதா? ஏன் இந்த முடிவு எடுத்தார்? மனம் மாறி விட்டாரா? கடந்த காலத் தவறுக்கு கழுவாய் தேடுகிறாரா?

ஜெயலலிதாவைக் கேட்கிறேன், உச்சநீதிமன்றம் மறு ஆய்வுக்குழு சொல்லியும் வழக்கை திருப்பிப் பெற உங்களைத் தடுத்தது எது?

உங்கள் ஆணவம், அகம்பாவம், எதேச்சதிகாரம், பாசிச வெறியாட்டம் தடுத்தது. வெறிகொண்ட மனோபாவம் தடுத்தது. எங்கள் மீது மட்டும் வழக்குகளை திருப்பிப் பெற்ற ஜெயலலிதா அரசு பழ.நெடுமாறன், பாவாணன் போன்றோர் மீது ஏன் திருப்பிப் பெறவில்லை?

அப்படித் திருப்பிப் பெற்று இருந்தால், அவர் திருந்தியதாக அர்த்தம் செய்திருக்கலாம். ஆனால், அவர் திருந்தவில்லை. திருந்தவும் மாட்டார். ஜனநாயகத்தின் பெயரை உச்சரிக்கக்கூட ஜெயலலிதாவுக்குத் தகுதியில்லை.

"என்னைச் சிறையில் அடைத்ததால் 19 மாதம் நாடாளுமன்றத்தில் பேச முடியவில்லை. நமீபியாவில் நடைபெற்ற பொதுநல நாடுகளது [illegible] வாய்ப்பை இழந்தேன். சிறையில் இருந்து டெல்லி சென்று நாடாளுமன்றத்தில் பேச அனுமதிக்கப்பட்டு இருந்தால், அன்றைக்கு ஜெயலலிதாவைத் திருப்திப்படுத்த அத்வானி கொண்டுவந்த சட்ட திருத்தத்தைப் பற்றி நேருக்குநேர் அவரைக் கேட்டிருப்பேன்."

வைகோ சிகாகோவில் நடந்த அமெரிக்க தமிழ்ச் சங்கங்களின் பேரவை மாநாட்டில் கலந்துகொண்டு, நாடு திரும்பியபோதுதான் பொடா சட்டத்தின் கீழ் சென்னை விமான நிலையத்தில் வைத்து 2002 ஆம் ஆண்டு யூலை 11இல் கைது செய்யப்பட்டார்.

மத்திய தேசிய ஜனநாயக முன்னணி அரசில் மதிமுக இருப்பதால், பாரதிய ஜனதாக் கட்சி தன்னைக் கைவிடாது என்ற நம்பிக்கை வைகோவுக்கு அப்போது இருந்திருக்கலாம். ஆனால், பாஜக தலைவர் வெங்கையாநாயுடு, முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் யோர்ஜ் பெர்ணான்டஸ் இருவர் தவிர அத்வானியோ வேறு யாருமே மரியாதை நிமித்தம்கூட வைகோவைச் சிறையில் சந்திக்கவில்லை.

பொடா சட்டம் எல்லை கடந்த பயங்கரவாதத்துக்கு மட்டும் பயன்படுத்தப்படுமேயொழிய அரசியல் பழிவாங்கலுக்குப் பயன்படுத்தப்படமாட்டாது என எல்கே.அத்வானி போன்றோர் கொடுத்த உறுதி மொழியை நம்பியே பொடா சட்டத்துக்கு ஆதரவாக திரு.வைகோ வாக்களித்தார்.

ஆனால், அந்தச் சட்டத்தை அரசியல் பழிவாங்கும் நோக்கோடு தமிழக முதல்வர் ஜெயலலிதா-வைகோ மீது ஏவிவிட்டபோது, பாஜ கட்சி அதனைக் கண்டுகொள்ள வில்லை. குறிப்பாக உள்துறை அமைச்சர் எல்.கே.அத்வானி கண்டு கொள்ளவில்லை.

ஜெயலலிதா - வைகோவுக்கு எதிராக பொடாவை ஏவியபோது அதற்கு அத்வானியின் மறைமுக ஆதரவு இருந்தது என்பதுதான் அதற்குக் காரணம். வைகோதான் இந்துத்துவானின் பிதாமகனாக அத்வானியை நம்பி ஏமாந்து போனார்.

தி.மு.க. மற்றும் பா.ம.க கொடுத்த அழுத்தம் காரணமாகவே மத்திய அரசு பொடா மறு ஆய்வுக் குழுவை நியமித்தது.

அரசியல்வாதிகளில் வைகோ ஒரு கொள்கைவாதி என்பதில் மாற்றுக் கருத்துக் கிடையாது.

சிறையில் இருந்தபோது, எந்தச் சிறப்பு வசதிகளையும் பெற்றுக் கொள்ளாது ஏனைய கைதிகளுக்குக் கொடுக்கப்பட்ட உணவையே உண்டார். அதிலும் வைகோ ஒரு அசைவப் பிரியர் என்று ஒரு பத்திரிகை எழுதியதைப் படித்துவிட்டு, சிறையில் சைவ உணவை மட்டும் உண்பது என்று முடிவு செய்து அப்படியே கேட்டுவாங்கி உண்டார். சிறை அதிகாரிகள் கொடுத்த மின் விசிறியைக்கூட அவர் பயன்படுத்த மறுத்துவிட்டார்.

அவர் நினைத்திருந்தால் சிறையில் ஏ வகுப்பு வசதிகளைப் பெற்றிருக்கலாம்.

இந்த ஆண்டுத் தொடக்கத்தில் தி.மு.க தலைவர் கலைஞர் கருணாநிதியின் வேண்டுகோளைத் தட்ட முடியாமல் பிணையில் வெளிவருவதில்லை என்ற தனது முந்திய முடிவை மாற்றி பிணைமனுச் செய்து சிறையில் இருந்து வெளியேவந்தார்.

அன்றும், இன்றும், என்றும், கொட்டியும் ஆம்பலும்போல் விடுதலைப் புலிகளின் தலைமையிலான தமிழீழ மக்களது விடுதலைப் போருக்குத் தொடர்ச்சியாக ஆதரவு அளித்து வரும் ஒரே அரசியல்வாதி வைகோ தான்.

கடந்த மாதம் கன்னியாகுமரி தொடங்கி சென்னைவரை வைகோ ஒரு நடைப்பயணம் ஒன்றை மேற்கொண்டுள்ளார். இதில் சீருடை தரித்த ம.தி.மு.க தொண்டர்கள் கலந்து கொள்கிறார்கள்.

வைகோவிடம் கொள்கைப் பிடிப்பு இருக்கிறது. அரசியல் நேர்மை இருக்கிறது. படிப்பு இருக்கிறது. பட்டம் இருக்கிறது.மக்களைக் கவரும் வண்ணம் மேடையில் பேசும் திறமை இருக்கிறது.

பொடா சட்ட வழக்கில் கறுப்புச் சட்டை மாட்டிக்கொண்டு தன் சார்பில் தானே வாதாடினார்.

இதற்குக் காரணம் என்ன? திராவிடக்கட்சிகள் அண்ணா பெரியாரின் கொள்கைகளில் சமரசம் செய்துவிட்டது காரணமா?

கொள்கைக்காக 19 மாதங்கள் சிறையில் தவம்செய்துவிட்டு, நீதிமன்றத்தில் கருத்துச் சுதந்திரமாகவும், பேச்சு சுதந்திரத்துக்காகவும் வாதாடி வெற்றிபெற்று விட்டு இப்போது மக்களைச் சந்திக்க நடைப் பயணத்தை தொடங்கியிருக்கும் வைகோவுக்கு இனிமேலாவது அரசியலில் திருப்புமுனை ஏற்படுமா? பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். ☼

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஆப்கானின் இரு இடங்களில்

# இடம்பெற்ற குண்டுவெடிப்புகளில் மாணவர்கள் உட்பட 17 பேர் பலி!



(காபூல்)

ஆப்கானிஸ்தானில் இருவேறு இடங்களில இடம்பெற்ற குண்டுவெடிபபுக்களில் பாடசாலை மாணவர்கள் உட்பட 17 பேர் கொல்லப்பட்டனர். இதில் முதலாவது தாக்குதல் ஆப்கான் தலைநகர் காபூலிலுள்ள அமெரிக்கப படையினரால் ஆப்கான் பொலிஸார் மற்றும் ஜனாதிபதி ஹமீட் ஹர்சாயின் மெய்ப்பாதுகாவலர்களுக்கு பயிற்சி வழங்கும் நிலையத்திற்கு அருகில் நடத்தப்பட்டது.

இந்தத் தாக்குதலில் மூன்று அமெரிக்கர், மூன்று நேபாள நாட்டவர் உட்பட ஏழுபேர் கொல்லப்பட்டனர். தமது உறுப்பினர் ஒருவர் தாங்கியை பாவித்து இங்கு குண்டை வெடிக்கவைத்ததாக தலிபான் அமைப்பு தெரிவித்தது. பாதுகாப்புமிக்க இந்தப் பகுதிக்கு குண்டுதாரி எவ்வாறு ...வும் நெருக்கமாகச் சென்றாரென ஆப்கான் மற்றும் ...நாட்டவர்களின் விசாரணையாளர்கள் விசாரணை ...த்துவருவதாக தெரிவிக்கப்படுகிறது. குண்டுவெடிப்பு ...க இந்தப் பிரதேசத்தில் தமது நடவடிக்கைகளை ...ரிசீலனை செய்யப்படவுள்ளதாக நேட்டோ தலைமை ...ான சர்வதேச அமைதிப்படையின் பேச்சாளர் தெரிவித ...

இந்தத் தாக்குதலையடுத்து ஆப்கானிலுள்ள அமெரிக்க பிரஜைகளை மீது தேவையற்ற விதத்தில் தாக்குதல் நடக்குமென எதிர்பார்க்கப்படும் அரசாங்க அலுவலகங்கள் மற்றும் நேட்டோ படைமுகாம்களுக்கு செல்வதைத தவிர்க்குமாறு ஆப்கானிலுள்ள அமெரிக்கத தூதரகம் அறிவித்துள்ளது. இதேபோன்றதொரு அறிவித்தலை ஆப்கானிலுள்ள சர்வதேச நிறுவனங்களும் தமது பணியாளர்களுக்கு விடுத்துள்ளது.

இந்தத் தாக்குதலையிட்டு தான் மிகவும் அதிர்ச்சியடைந்துள்ளதாகவும் இந்த கொடூரமான தாக்குதல் மூலம் அமெரிக்கா ஆப்கானுக்கு உதவிசெய்வதை நிறுத்தமாட்டாது எனவும் ஆப்கானிலுள்ள அமெரிக்க தூதுவர் சால்மே ஹலீஸ்ஷாத் தெரிவித்தார்.

இந்தத் தாக்குதலின் பின்னர் தலிபான் அமைப்பைச் சேர்ந்த பேச்சாளரெனத் தெரிவித்து ஒருவர் தம்முடன் தொலைபேசி வாயிலாகத் தொடர்புகொண்டு இந்தத் தாக்குதல் அமொிககப் படைகளுக்கெதிராகவே நடத்தப்பட்டதாகவும் ஆப்கான் பிரஜைகளுக்கெதிராக அல்ல என தெரிவித்ததாக அல் ஜசீரா தெரிவித்தது.

காபூலில் நடத்தப்பட்ட தாக்குதலில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாமென அஞ்சப்படுகிறது. காபூலில் நடந்த தாக்குதலின் ஒரு சில மணிநேரத்தின் பின்னர் ஆபகானின் தென்பகுதியிலுள்ள பாடசாலை ஒன்றில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் பத்து பாடசாலைச் சிறுவர்கள் கொல்லப்பட்டதுடன் மேலும் பத்துப்பேர் படுகாயமடைந்ததாக அமெரிக்க இராணுவம் தெரிவித்தது.

பாடசாலை மாணவர்கள் கொல்லப்பட்ட சம்பவத்திற்கு ஏதாவது விபத்தா அல்லது தாக்குதல் சம்பவமா காரணம என்பது தெளிவாக தெரியவரவில்லையென செய்திகள் தெரிவிக்கின்றன. இந்தத் தாக்குதலில் காயமடைந்த பத்துப்பேரும் அமெரிக்க இராணுவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

எதிர்வரும் ஒக்டோபர் மாதம் ஆப்கானில் ஜனாதிபதி தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், அங்கு ஆப்கான் அரசை எதிர்க்கும் தலிபான்கள் மேலும் பல தாக்குதலை நடத்தலாமென மக்கள் அஞ்சுவதாக பி.பி.சி.யின் செய்தியாளர் அன்ட்ரூ தெரிவித்தார்.

# பாகிஸ்தான் இராணுவ முகாம் தாக்குதலுக்குள்ளானது!

பாகிஸ்தான் நாட்டின் ஆப்கான் எல்லையோரப் பகுதிகளில் பதுங்கியுள்ள வெளிநாட்டுத் தீவிரவாதிகளை அழிக்கும் முயற்சியில் இராணுவம் ஈடுபட்டுள்ளது. இதற்காக தெற்கு வசிரிஸ்தான் பகுதியில் உள்ள வானா நகரில் ராணுவ முகாம் அமைககப்பட்டுள்ளது. இங்கு உள்ளூர் பழங்குடி இன மக்களுடன் இணைந்து வெளிநாட்டுத் தீவிரவாதிகளை நாட்டைவிட்டு வெளியேற்றும் முயற்சியில் பாகிஸ்தான் இராணுவம் ஈடுபட்டு வருகிறது.

இதனால் ஆத்திரமடைந்த தீவிரவாதிகளின் கும்பல் இராணுவ முகாம மீது குறிவைத்து தாக்குதல் நடத்தி வருகிறது. கடந்த சில நாட்களுக்கு முன்பு ராஸ்மார்க் பகுதியில் பாகிஸ்தான் துணை இராணுவப் படையினர் முகாம் அமைத்துத் தங்கியிருந்தனர். அந்தமுகாம்மீது இஸ்லாமியத தீவிரவாதிகள் ரொக்கட் வெடிகுண்டுகளை வீசித் தாக்குதல் நடத்தினார்கள். இதில் பலர் பலியாகினர்.

தற்போது வானா நகரில் அமைககப்பட்டுள்ள இராணுவ முகாம்மீது தீவிரவாதிகள் ரொக்கட் வெடிகுண்டுகளை வீசித் தாக்குதல் நடத்தினார்கள். இதில் ஒரு வீரர் பலியானதுடன், பலர் படுகாயமடைந்தனர்.

# நேபாள துணைப் பிரதமரை கொலைசெய்வதற்கு முயற்சி

நோபாளத்தின் துணைப் பிரதமராகவும், நிதி அமைச்சராகவும் இருப்பவர் பாரத் மோகன் அதிகாரி. இவரது வீடு காத்மண்டுவில் உள்ள லலித்பூரில் இருக்கிறது. வீட்டைச் சுற்றிலும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது.

இந்த நிலையில் துணைப் பிரதமரின் வீட்டுக்கு வெளியே உள்ள




மரத்தில் பதுங்கியிருந்த இனந்தெரியாத நபர் துப்பாக்கியால் வீட்டை நோக்கிச்சுட்டார்.

இதனையடுத்து இனந்தெரியாத நபர் பதுங்கியிருக்கும் இடத்தை நோக்கிப் படையினர் விரைந்து சென்றனர். அப்போது அவர் கண்மூடித்தனமாகச் சுட்டதில் 4 படை அதிகாரிகள் பலியானார்கள். 3 பேர் காயமடைந்தனர்.

பாதுகாப்பு அதிகாரிகள் மரத்தைச சுற்றிவளைக்கும் முன்பு, அந்த நபர் தப்பியோடிவிட்டார். இவர் மவோயிஸ்ட் தீவிரவாதியாக இருக்கலாம் என்று சந்தேகம் ஏற்பட்டுள்ளது. துணைப் பிரதமர் பாரத் மோகன் அதிகாரியைக் கொல்வதற்காக இவர் வந்திருக்கலாம் என்று பாதுகாப்பு அதிகாரிகள் கருதுகிறார்கள்.

### ஈராக்கில் கடத்தப்பட்ட

# பிரான்ஸ் பிரஜைகளை விடுவிக்க நடவடிக்கை!



(பாக்தாத்)

ஈராக்கில் கடத்தப்பட்ட தனது நாட்டு நிருபர்கள் இருவரையும் விடுவிக்க பிரான்ஸ் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துவருகிறது. இந்தப் பிரச்சினை குறித்து விவாதிக்க பிரான்ஸ் பிரதமர் தலைமையிலான மூன்று உயர் அமைச்சர்கள் கூட்டம் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்டது.

கடந்த வெள்ளிக்கிழமை ஈராக்கின் தலைநகர் பாக்தாத்திலிருந்து ஷியா பிரிவின் புனித நகரமான நஜாவ்விற்குச் சென்றுகொண்டிருந்தபோது பிரான்ஸ் பிரஜைகள் இருவரும் கடத்திச்செல்லப்பட்டனர்.

இவர்கள் நிருபர்கள் என்று அரேபியத் தொலைக்காட்சியான அல்-ஜசீரா தெரிவித்தது. பிரான்ஸ் வானொலியில் பணியாற்றும் நிருபர் கிறிஸ்டியன் செஸ்னாட் பாரீஸ் தினசரியில் பணியாற்றும் ஜோர்ஜஸ் மார்புருனாட் ஆகியோரே அந்த இருவருமாவர்.

இவர்களைக் கடத்திய இஸ்லாமியப் படை என்று கூறிக்கொள்ளும் தீவிரவாத அமைப்பு வெளியிட்ட வீடியோ பதிவில் இந்தத் தகவல் தெரியவந்துள்ளது. பிரான்ஸ் பாடசாலைகளில் கல்விகற்கும் முஸ்லிம் மாணவிகள் மதரீதியான ஆடைகளை அணியக்கூடாது என்று அந்நாட்டு அரசாங்கம் தடைவிதித்திருப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து தீவிரவாதிகள் இந்தக் கடத்தலை நடத்தியுள்ளனர்.

# ஈராக்கில் ஆயுதக் குழுக்களின் ஆயுதங்கள் களையப்படுமாம்!

### பிரதமர் இயட் அலாவி தெரிவிப்பு

(பாக்தாத்)

ஈராக்கில் ஆயுதங்களைக் கைவிடமறுத்து நாட்டின் ஸ்திரத்தன்மையைக் குலைக்க முயற்சிக்கும் ஆயுதக் குழுக்கள் தோற்கடிக்கப்படுவார்கள் என ஈராக்கின் இடைக்காலப் பிரதமர் இயட் அலாவி தெரிவித்தார்.

இவரது இந்த அறிவிப்பு அமெரிக்கப்படைகளுக்கும், ஷியா பிரிவு கிளர்ச்சிவாதிகளுக்கும் இடையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற தாக்குதல், மற்றும் பாக்தாத்திலுள்ள எண்ணை விநியோக குழாய் மீது கிளர்ச்சிவாதிகள் நடத்திய தாக்குதல் என்பவற்றுக்குப் பின்னர் வெளிவந்துள்ளது.

தனியார் எவரும் ஆயுத ரீதியான நடவடிக்கைகளில் ஈடுபட அனுமதிக்கப்படமாட்டார்கள். மெடி இராணுவத்தைச் சேர்ந்த சிலர் நஜாவ் நகரில் குழப்பத்தை விளைவித்து வருகின்றனர். இதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது. ஆயதுல்லா சிஸ்ராணியுடன் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கையின்படி சதார் ஆதரவாளர்கள் பலர் தம்மிடமுள்ள ஆயுதங்கள் எதனையும் ஒப்படைக்கவில்லையென ஈராக்கிய அமைச்சரான காசிம் தாவூர் தெரிவித்தார்.

இதேவேளை, நேற்றுமுன்தினம் இரண்டு ஆயுததாரிகளை ஈராக்கின் வடபகுதியில் சுட்டுக்கொன்றதாக அமெரிக்க இராணுவம் தெரிவித்தது. அத்துடன், பாக்தாத்திலுள்ள தமது காவல் நிலைகளை நோக்கி எட்டு மோட்டார் குண்டுகள் வீசப்பட்டதாகவும், அதிலொன்று



தமது கட்டுப்பாட்டிலுள்ள உபமின் நிலையம்மீது வீழ்ந்து வெடித்ததில் மின் விநியோகம் தடைப்பட்டதாகவும் அமெரிக்க இராணுவம் தெரிவித்தது.

நேற்றுமுன்தினம் பஸ்ரா நகரிலுள்ள எண்ணை விநியோகக் குழாய்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலால், எண்ணை விநியோகம் தடைப்பட்டது. கடந்த வியாழக்கிழமையும் இப்பகுதியில் எட்டு எண்ணை விநியோகக் குழாய்கள் தாக்கப்பட்டு சேதப்படுத்தப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.


# புஷ்ஷை சுட்டுக்கொல்வதாக மிரட்டிய நபர் கைதானார்!

அமெரிக்க அதிபராக இருப்பவர் புஷ். இவரது தந்தை சீனியர் ஜோர்ஜ் புஷ். இவர்கள் இருவரையும் சுட்டுக்கொல்லப்போவதாக மிரட்டிய ஜோசப் மசகாவ் (வயது 35) என்பவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கடந்த ஜூலை மாதம் 15 ஆம் திகதி அதிபர் புஷ் தாம்பா நகருக்குச் சுற்றுப்பயணம் சென்றார். அப்போது அவர் தங்கும் இடத்தைச் சுததம்செய்யும் பணியில் ஜோசப் ஈடுபட்டார். இவர் புஷ்ஷின் எதிர்ப்பாளர் என்று கூறப்படுகிறது.

இதனால் கோபமடைந்த ஜோசப்- அதிபர் சுட்டுக்கொல்லப்படவேண்டியவர், அவரது தந்தையும் சுட்டுக்கொல்லப்படவேண்டியவர். எனக்கு யாராவது குண்டுகள் தந்தால் நான் இதைச் செய்வேன் என்று கூறினார்.

இதையடுத்து அவரைக் கைது செய்து நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தினர். தற்போது பிணையில் வெளி



வந்திருக்கும் ஜோசப் மீதான குற்றச்சாட்டுகள் நிருபிக்கப்பட்டால் அவர் 5 ஆண்டு சிறைத்தண்டனை அனுபவிக்கவேண்டியிருக்கும்.

# டர்பூர் பாதுகாப்பை பலப்படுத்த சூடான் அரசிற்கு ஐ.நா அழுத்தம்

சூடானின் டர்பூர் பிரதேசத்தில் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேம்படுத்துமாறும், அவ்வாறு செய்யவில்லையெனில் சூடான்மீது நடவடிக்கை எடுக்கவேண்டிவருமெனவும் ஐ.நா.சபை நேற்று சூடானை எச்சரித்துள்ளது.

அத்துடன், அரசிற்கு ஆதரவாகச் செயற்படும் ஆயுதக் குழுக்களிடமிருந்து உடனடியாக ஆயுதங்கள் களையப்படவேண்டும் எனவும் ஐ.நா., சூடான் அரசிற்கு அறிவுறுத்தியுள்ளது.

ஆனாலும், ஐ.நா. சபை தெரிவித்துள்ள இந்தக் கோரிக்கைகளை [illegible] செய்துவருவதாக தற்போது நைஜீரிய தலைநகரில் நடைபெறும் பேச்சுவார்த்தையில் கலந்துகொண்டுள்ள சூடான் அமைச்சர் அபுஜா தெரிவித்தார்.

இதேவேளை, மழைகாலம் தொடங்குமாக இருந்தால் டர்பூர் பிரதேசத்திலுள்ள அகதிகளுக்கு நிவாரண உதவிகளை வழங்குவதில் நெருககடிகள் ஏற்படுமென சர்வதேச தொண்டு நிறுவனமான ஒக்ஸ்பாம் தெரிவித்தது.

நைஜீரியாவில் இடம்பெற்றுவரும் பேச்சுவார்த்தைகளில் ஏற்பட்ட இணக்கத்தை அடுத்து, மேலும் 150 ஆபிரிக்க யூனியன் படையினர் டர்பூர் பிரதேசத்தில் யுத்தநிறுத்தக் கண்காணிப்பை மேற்கொண்டுவரும்



கண்காணிப்பாளர்களுக்கான பாதுகாப்பை வழங்கச் சென்றுள்ளதாகத் தெரியவருகிறது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# புஸ்பமாலாவின் விடைத்தாள் கொழும்பில் திருத்த ஏற்பாடு!

## துணைவேந்தர் மோகனதாஸ் தெரிவிப்பு

யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவி கி.புஸ்பமாலாவின் விடைத்தாள்கள் கொழும்புக்கு அனுப்பித் திருத்தப்பட்டு ஒரு மாதத்திற்குள் அவரது பெறுபேறுகள் கையளிக்கப்படும் என, யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது -

எமது பல்கலைக்கழகத்தில் கடந்த காலங்களில் நடைபெறாத வகையிலான சில அதிர்ச்சிக்குரிய சம்பவங்கள் நடைபெற்று வருகின்றன. நேற்றுமுன்தினம் பல்கலைக்கழக வளாகத்தினுள் நுழைந்து எனது அறையைப் பூட்டிய வெளியார் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

புஸ்பமாலாவின் மூன்று வருட விடைத்தாள்கள் அவரது விருப்பப்படி கொழும்பு பல்கலைக்கழகத்தற்கு என்னால் எடுத்துச்செல்லப்பட்டு அங்குள்ள மருத்துவ பீடத்தினரிடம் கையளிக்கப்பட்டு அங்குள்ள துறைசார்ந்த விரிவுரையாளர்களால் திருத்தப்படவுள்ளது.

இதன் பெறுபேறுகள் அடுத்த மாத இறுதிப்பகுதியில் மாணவிக்குத் தெரிவிக்கப்படும்.

அத்தோடு அந்தப் பரீட்சை விடைத்தாள்கள் திருத்தப்பட்ட பின்னரும் அம்மாணவி சித்தியடையத் தவறியிருப்பின் அவருக்கு பரீட்சை எழுதுவதற்கான அனுமதியும் வழங்கப்படும் எனவும் துணைவேந்தர் மேலும் தெரிவித்தார். (ப)

### கூட்டமைப்பு...

புலித்தேவன் மற்றும் மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர்கள் ஆகியோரும், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் சார்பில் 22 நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.

இந்தச் சந்திப்பில் தற்போதைய அரசியல் நிலைமை தொடர்பாகவும், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு எதிர்காலத்தில் முன்னெடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாகவும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

### ஆயுதக் குழுக்களின்...

சர்வதேச சமூகத்துக்கும், அனைத்துத் தரப்பிற்கும் நியாயப்பாடுகளை - நிலைப்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதற்கு முடிவெடுக்கப்பட்டது. அத்தோடு நாடாளுமன்றத்தில் தமிழர் தரப்பு நிலைப்பாடுகளை சிறப்பாக முன்னெடுப்பதற்காக குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏற்படுகின்ற படுகொலைச் சம்பவங்கள் தொடர்பாகவும், பரந்த அளவில் போர்நிறுத்தத்திற்கு ஏற்படுகின்ற அச்சுறுத்தல்கள் தொடர்பாகவும் இன்றைய சந்திப்பில் விரிவாக ஆராயப்பட்டது.

அரசாங்கமும், படைத்தரப்பும் போர்நிறுத்த உடன்படிக்கையின்படி தமிழர் தாயகப் பகுதிகளில் ஆயுதக் குழுக்களிடம் இருந்து ஆயுதங்கள் களையப்பட்டு அவர்கள் தமிழர் தாயகப் பகுதிகளிலிருந்து வெளியேற்றப்பட வேண்டும் என்பது ஏற்கனவே இரு தரப்பும் ஏற்றுக்கொண்ட விடயம். அதனை மீறி ஆயுதக் குழுக்களைச் செயற்பட அரசாங்கம் அனுமதித்திருப்பதுதான் இன்று இடம்பெறுகின்ற கொலைகளுக்குக் காரணமாகும்.

இந்தக் கொலைகள் நிறுத்தப்பட வேண்டுமானால் போர்நிறுத்த உடன்படிக்கையில் ஏற்றுக்கொண்ட நடைமுறைகளை பேணி மதித்து நடப்பதுதான் பொருத்தமானது.

எனவே படைத் தரப்பும் அரசும் மீண்டும் இந்த ஆயுதக் குழுக்களின் செயற்பாடுகளை முடிவுக்குக் கொண்டுவந்து அவர்களுடைய நடவடிக்கைகளை நிறுத்துவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

உயர் பாதுகாப்பு வலயங்கள், பாதுகாப்பு வலயங்கள் என்று பல்லாயிரக்கணக்கான குடும்பங்கள் தங்களுடைய சொந்த இருப்பிடங்களுக்கு போகமுடியாமல் மிகுந்த நெருக்கடியையும், பெரும் அவலத்தையும் சந்தித்திருக்கின்றனர். இந்த மக்களுக்கு இந்த இரண்டரை வருடகால அமைதிச் சூழலிலும் எந்த நிவாரணமோ, அவர்களுடைய கஸ்ரங்கள் துன்பங்களுக்கு அவர்களுடைய எதிர்பார்ப்புகளுக்கு எந்தவித தீர்வும் கிடையாது - இன்று அவர்கள் மத்தியில் பெரிய விரக்தி ஏற்பட்டுள்ளது. இது ஒரு மனிதாபிமானத் தேவை, ஆகவே இதற்கும் ஒரு தீர்வு காண சகல மட்டத்திலும் எங்களுடைய செயற்பாடுகளை சகலரும் தீவிரப்படுத்த வேண்டும் என்று தீர்மானம் எடுத்திருக்கின்றோம் என தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

### கனடாவில்...

கின்றன.

பலியான இளைஞர்களில் ஒருவரின் தகப்பனார், இந்த அனர்த்தம் குறித்து அறிந்தவுடன் மயக்கமடைந்த நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

### பாலா...

திப்பு இடம்பெறவுள்ளதாகத் தெரிய வருகின்றது.

இந்தச் சந்திப்பையடுத்து, நோர்வேத் தரப்பினர் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை கொழும்பி[ல்] சந்தித்துப் பேச்சு நடத்துவர் [...] கொழும்புச் செய்திகள் தெரிவ[ிக்]கின்றன.

ஜனாதிபதியுடனான இந்தச் சந்திப்பில் இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கருடன், போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் ட்ரொன்ட் புறூவ் ஹொவ்டேயும் கலந்துகொள்வார்.

கிழக்கு மாகாணத்தில் இராணுவப் புலனாய்வுப் பிரிவின் ஏற்பாட்டில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுவரும் தாக்குதல்களை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கும்படி ஜனாதிபதியிடம் இவர்கள் வலியுறுத்துவார்கள் எனத் தெரியவருகின்றது.

## இடைக்கால நிர்வாகசபை யோசனைக்கு

# தென்பகுதி மக்களின் ஆதரவைப் பெற[...]

# கூட்டமைப்பு எம்.பிக்கள் தீர்மானம்!

தமிழீழ விடுதலைப் புலிகள் அரசிடம் சமர்ப்பித்துள்ள வடக்கு - கிழகுக்கான இடைக்கால தன்னாட்சி அதிகார சபை தொடர்பாக தென்னிலங்கை மக்களின் ஆதரவைப் பெறுவதற்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தீர்மானித்துள்ளனர்.

நேற்றுக் கிளிநொச்சியில் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழச்செல்வனை சந்தித்த பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் பி.பி.ஸிக்கு அளித்த பேட்டியில் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எதிர்வரும் 11 ஆம், 12 ஆம், 13 ஆம் திகதிகளில் நேற்று பிரஸ்தாபிக்கப்பட்ட தேசியக்குழு, திருகோணமலை, மூதூர் பகுதிக்கான நேரடி விஜயம் ஒன்றை மேற்கொள்ள இருக்கிறது.

அங்கு செல்லும் இந்தக் குழு அந்தப் பகுதி பிரதேச மக்களைச் சந்தித்து உரையாடி அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் நடவடிக்கையை மேற்கொள்ளவிருக்கிறது.

இதேபோல இந்தக் குழுவினர் எதிர்வரும் ஒக்டோபர்மாதம் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களுக்குச் சென்று அங்குள்ள மக்களையும் சந்திக்கவுள்ளனர்.

தென்பகுதியில் ஜாதிக ஹெல உறுமய, ஜே.வி.பி ஆகிய கட்சிகள் இடைக்கால நிர்வாக சபை யோசனைக்கு எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றன.

இதற்கு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களாகிய நாம் நாடாளுமன்றத்தினுள்ளேயும், வெளியேயும் செயற்பட வேண்டுமென்ற முடிவை எடுத்திருக்கிறோம்.

தென்பகுதி மக்கள் மத்தியில் நாங்கள் போதிய விளக்கம[...] இருக்கிறோம். அதுமாத்திர[...] முஸ்லிம் மக்கள், மலையக[...]ளுக்கும் எங்களுடைய நி[...] பாட்டை விளக்கி அவர்களு[...] ஆதரவையும் திரட்டவுள்ளோ[ம்].

இதற்கு மேலதிகமாக எங்[...]டைய நியாயத்தை சர்வதேச சமூ[...]துக்கு விளக்கி சர்வதேச சமூ[...]தின் ஆதரவை நாங்கள் பெ[...]தென தீர்மானம் மேற்கொண்[...]ளோம் என்று அவர் மேலும் [...]வித்தார்.

## கண்காணிப்புக் குழு...

பிரதிநிதிகளுக்கும், அம்பாறை மாவட்ட கண்காணிப்புக் குழுத் தலைவருக்குமிடையில் இன்று சந்திப்பொன்று நடைபெறவுள்ளது.

இன்று காலை பத்து மணிக்கு அம்பாறை தம்பிலுவிலில் அமைந்துள்ள மாவட்ட அரசியற்துறைப் பணிமனையில் இந்தச் சந்திப்பு நடைபெறவுள்ளது. இதில் விடுதலைப் புலிகள் தரப்பில் அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் கு[...]லின்பன் தலைமையிலான கு[...]வினர் கலந்துகொள்ளவுள்[ள]னர்.

இன்றைய சந்திப்பில் [...] நிறுத்தத்தை செம்மையாக [...] முறைப்படுத்துவது மற்றும் [...] விடயங்கள் தொடர்பாகவும் கல[ந்து]ரையாடப்பட இருப்பதாக தெரி[வி]க்கப்படுகிறது.

## வயல் வேலைக்கு சென்றவர் சடலமாக நேற்று மீட்கப்பட்ட[...]

மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து அம்பாறை மாவட்டத்திற்கு வயல் வேலைக்காகச் சென்ற இளைஞர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றது. இதில் மட்டக்களப்பு பளுகாமம 3 கடற்கரை வீதியைச் சேர்ந்த பரமலிங்கம் சுதாகரன் (வயது 25) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது -

கடந்த வாரம் மட்டக்களப்பிலிருந்து அம்பாறைக்கு வயல் வேலைக்குச் சென்ற மேற்படி நபர் கடந்த மூன்று நாட்களுக்கு மு[...] மட்டக்களப்பிலுள்ள தனது வீட்[...]குச் செல்வதாக கூறிச் சென்[...]ளார்.

ஆனால் மூன்று நாட்கள் கட[ந்]தும் இவர் மட்டக்களப்பிற்கு செ[...]லாத நிலையில் நேற்று அம்பா[றை] மாவடட்டத்தில் வளர்த்தாப்பி[...] எனுமிடத்தில் சடலமாக மீட்கப்ப[ட்]டார்.

இவரது உடலில் அடிகாயங்கள் காணப்படுவதாக சம்மாந்துறைப் பொலிஸார் தெரிவித்தனர். இது தொடர்பாக சம்மாந்துறைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (07)

### இரண்டாவது...

நிதியமைச்சரின் தலைமையின் சீ[...] மகரகம தேசிய இளைஞர் சேவை நிலையத்தில் வைபவம் ஒன்று [...] பெறு[...]

[...]ந்சியில் வள வல்[...] இளைஞர்சேவை[...]ம், [...] கல்வி நிறுவகம் மற்றும் [...]ட அர[ச]ாங்க ஊழியர்கள் [...]படுவர்.

[...] ஆயிரம் பட்டதாரிகளுக்கு [...]ரிய நியமனங்கள் வழங்கப்படுவதோடு, 5 ஆயிரம் பட்டதாரிகளுக்கு இறைவரித் திணைக்களத்தில் பதவிகள் வழங்கப்படும் என நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

### புலிகள்...

சுறுத்தலும் இல்லை என அவர் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின் இடைக்கால நிர்வாக யோசனை வரைபை அடிப்படையாகவைத்து பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படுமானால், அதனைத் தாம் முற்றாக எதிர்ப்போம் என அரசின் முக்கிய பங்காளிக் கட்சியான ஜே.வி.பி. தெரிவித்து வரும் நிலையில் அமைச்சர் ஒருவர் மேற்கண்ட கருத்தைத் தெரிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது.


**பட்டதாரிகளுக்கான விசேட பொதுக்கூட்டம்**

*காலம்:* 31.08.2004 செவ்வாய்க்கிழமை

*நேரம்:* காலை 10.30 மணி

*இடம்:* புதிய உயர் கலைக் கல்லூரி (ஆரியகுளம்)

*விடயம்:* முகாமைத்துவ பயிலுநர்களாக பெயர் வந்தவர்களும், வராதவர்களும் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக.

செயலாளர்

(920)

**THIRU ENGLISH**

**'திரு' ஆங்கிலம்**

பல்கலைக்கழக புகுமுக மாணவர்களின் தேவைகருதி புதிய வகுப்புக்கள் 06.09.2004 அன்று ஆரம்பமாகிறது.

புதுமுறையில் ஆங்கிலத்தை பேச எழுத, வாசிக்க..... ஐந்து மாத கால தினசரி வகுப்புக்களில் இணைய விரும்பும் மாணவர்கள் உடன் பதிவுசெய்யவும்



தொடர்புகட்கு -
'திரு' ஆங்கிலம்
87, திருநகர் (மஞ்சுளா வெதுப்பகச் சந்தி)
கிளிநொச்சி.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 31.08.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.